விலை ரூபா: 8.00 *Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 19 வெள்ளிக்கிழமை (03.06.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 166

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# திருகோணமலையில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரை வெளியேற்றக்கோரி வடக்குக் கிழக்கில் இன்று பூரணஹர்த்தால்

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அழைப்பு

(நமது நிருபர்)

**திருகோணமலை நகர்ப் பகுதியில் மக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய வகையில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினரை உடனடியாக அங்கிருந்து வெளியேற்றுமாறு கோரி இன்று வடக்கு-கிழக்கில் பூரணஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.**

**இதற்கான ஏற்பாட்டை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் திருகோணமலை தமிழர் பேரவையும் ஏற்பாடு செய்துள்ளன.**

திருகோணமலை நகரப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை விவகாரத்தின் அடுத்து அங்கு இராணுவம் குவிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

இதனால் உடனடியாக இராணுவத்தினரை அங்கிருந்து வெளியேற்றவேண்டுமென தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற உயர் மட்டப் பேச்சுக்களின் போது கலந்து கொண்ட கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களான (14 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழப்பு

### சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்து பேணுவதில் அரசுக்குத்தான் தார்மீகப்பொறுப்பு உண்டு என சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்று சுவிஸ்தூதுவரை சந்தித்தபின்னர் கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் இதனைத்தெரிவித்துள்ளார். திருமலை மற்றும் வவுனியா ஓமந்தை புத்தர் சிலை விவகாரம் மூலம் பேரினவாத சக்திகள் உருவாக்கிவரும் பதற்ற சூழல் ஆயுதக்குழுக்களை சிறிலங்கா இராணுவமே உருவாக்கி பாதுகாத்துவருவது மற்றும் தமிழ் மக்களின் மீதான இராணுவ நெருக்குவாரங்கள் ஆகியவற்றை விபரித்த தமிழ்ச்செல்வன் இத்தகைய நடவடிக்கைகளால் யுத்தநிறுத்த ஒப்பந்தம் மீது தமிழ்மக்கள் முழுஅளவிலான நம்பிக்கையின்மை கொண்டுள்ளனர் என்று தெரிவித்தார்.

ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து யுத்தநிறுத்த ஒப்பந்தங்களின் சரத்துக்களை (14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மாணவர் எழுச்சி நாள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு

### பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பங்கேற்பு



தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நேற்று குடாநாட்டில் எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மாணவர் எழுச்சிப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்டனர்.

நேற்றுக்காலை 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இருந்து ஆரம்பமான பேரணியானது இந்துக் கல்லூரி மைதானத்தினை வந்தடைந்தது.

இப் பேரணியில் பங்குபற்றிய மாணவர்கள் தேசியத்தலைவர் பிரபாகரனின் படத்தினைத் தாங்கியிருந்தனர். அத்துடன் இராணுவம் பாடசாலை மாணவர்களைத் தாக்குவதை கண்டித்துக் கோஷங்களும் எழுப்பப்பட்டன.

பேரணி முடிவில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் மாபெரும் எழுச்சிக்கூட்டம் நடைபெற் (14ஆம் பக்கம் பார்க்க)

## உதவி வழங்கும் நிறுவனங்களுடன் விடுதலைப்புலிகள் ஆலோசனை!

### கிளிநொச்சியில் நடாத்தத் தீர்மானம்

இலங்கைக்கு உதவிவழங்கும் நான்கு முக்கிய சர்வதேச நிறுவனங்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் கிளிநொச்சியில் ஆலோசனை நடத்தவுள்ளனர்.

கண்டி மாநாட்டு முடிபுகள் குறித்தும் ஆழிப்பேரலை மீளமைப்பு பணிகள் மற்றும் மறுசீரமைப்பு பணிகளை எதிர்காலத்தில் முன்னெடுத்து செல்வது குறித்தும் இச்சந்திப்பில் விவாதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் முடிவு எதுவும் எட்டப்படாத சூழலில் மக்கள் நம்பிக்கை இழந்து உள்ளனர். தற்போது உதவி வழங்கும் நிறுவனங்களுடனான சந்திப்பின் நோக்கம் எதிர்காலத்தில் மறுசீரமைப்பு பணிகளை எவ்வாறு முன்னெடுத்துச்செல்வது என்பதையே மையமாகக்கொண்டது என விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப்பணிப்பாளர் புலித்தேவன் (14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதமமந்திரியுடன் ஜனாதிபதி சந்திரிகா சந்திப்பு

### முக்கிய விடயங்கள் குறித்து ஆராய்வு

(புதுடில்லி)

மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இந்தியாவிற்கு சென்றிருக்கும் சந்திரிகா குமாரதுங்க நேற்று மாலை 7மணியளவில் இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின் போது சுனாமி அனர்த்த நிவாரணப்பணிகளினை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பு குறித்தும் இரு நாட்டினது பாதுகாப்பு விடயம் குறித்தும் விரிவாக ஆராய்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று புதுடில்லி சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவை இந்தியப்பிரதி வெளியுறவு அமைச்சர் அஹமது வரவேற்றார்.

அதன் பின்னர் இந்தியப்பிரதமரை சந்தித்த ஜனாதிபதி சந்திரிகா காங்கிரஸ் கட்சித்தலைவி சோனியாகாந்தி உள்ளிட்ட இந்தியத்தலைவரகள பலரையும் இன்று சந்திக்கவுள்ளார்.

இலங்கையின் சுனாமிப்புனர (14ஆம் பக்கம் பார்க்க)

## சண் மீள் ஒளிபரப்பு நிலையம் மீது தாக்குதல்

வவுனியாவில் ரெலோ இயக்கத்தினால் நடத்தப்பட்டு வந்த சண் தொலைக்காட்சி நிலையம் மீது நேற்று அதிகாலை 1.45 மணிக்கு கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வவுனியாவின் வைரவப்புளியங்குளத்தில் இயங்கிவரும் இந்த நிலையம் மீதான தாக்குதலில் பத்து இலட்சம் ரூபா மதிப்புள்ள சாதனங்கள் சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. மூன்று போர் கொண்ட குழுவினர் இத் தாக்குதலை நடத்திவிட்டுதப்பிச் சென்றுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது. (ச)

## கொடுவாமடு யுத்தசூனிய பிரதேசத்தில் நேற்று கிளைமோர் குண்டு வெடிப்பு

மட்டக்களப்பு செங்கலடி-பதுளைவீதியில் உள்ள கொடுவாமடு யுத்தசூனியப்பிரதேசத்தில் நேற்றுக்காலை கிளைமோர் குண்டு வெடிப்புச்சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

விடுதலைப்புலிகள்- இராணுவ முன்னணிக்காவலரணகளுக்கிடைப்பட்ட பகுதியில் இக்குண்டு வெடித்த போதிலும் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை.

விடுதலைப்புலிகளை தாக்கும் நோக்கத்துடன் ஊடுருவி தாக்கும் அவர்களுக்கு எதிரான சக்தி ஒன்று இதனை அங்கு மறைத்து வைத்திருக்கலாம் என கருதப்படுகின்றது.

இதேவேளை ஏறாவூர் சதாம் உசேன் கிராமத்தில் உள்ள வடு ஒன்றின் மீது நேற்று அதிகாலை ஆயுதக்குழுவொன்றினால் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. அந்நேரம் வீட்டில் எவரும் இல்லாத போதிலும் வீட்டின் முன்பக்கம் சிறு சேதமடைந்துள்ளது.

ஏறாவூர்ப்பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகிறார்கள். (ச-4)

EXPOAIR
your friend in the skies...
யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/ 8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290/ 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நாட்டை தாரைவார்க்கும் நடைமுறையை ரணிலை தொடர்ந்து முன்னெடுக்கிறது அரசு!

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு



(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கம் நாட்டினைத் தாரைவார்த்தமையை நடைமுறை அரசாங்கமும் தொடாந்து மேற்கொண்டு வருகின்றது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின துணைத்தலைவர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பததிரிகையாளா மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் அனைவரும் மேஜர் முததலிப்பின் படுகொலைக்குப் பொறுப்பேற்க வேண்டும்.

கருணா குழுவுக்கு இராணுவம் ஆதரவளித்து வருவதாக எதிர்க்கட்சித்தலைவர் ரணில் வக்கிரமசிங்க தெரிவித்து வருகின்றமையானது நாட்டில் பாரிய பிரச்சினைகளுக்கு வழிவகுததுள்ளது.

இராணுவம்கருணா குழுவுக்கு ஆதரவு வழங்குகின்றது என்று கூறப்படுவதெல்லாம் கற்பனைக் கதையாகும். இந்த நிலையில், நாட்டின முக்கிய தலைவர் ஒருவர் இவ்வாறு கருத்துரைப்பது ஆபத்தான விடயமாகும எனவும் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இதுதவிர, விடுதலைப்புலிகளுக்கு சார்பானவர்கள் கொல்லப்பட்டால் ஐக்கிய நாடுகள் சபை அதற்கு அனுதாபம் வெளியிடுகின்றமையையும் விமல் வரவன்ஸ கடுமையாக விமர்சித்தார். (ரு-4)

## புதிய வாகனம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையின் பாவனைக்கு வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் புதிய வாகனம் வழங்கப்பட்டுள்ளது.

முன்பிருந்த வாகனம் கல்வித்திணைக்கள யாழ்.பொறியியல் பிரிவினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ரு-29)

## இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு; பொலிஸ் சர்ஜன்ட் விளக்க மறியலில்!

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கட்டுவாந்த பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் சர்ஜன்ட் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமலிருப்பதற்காக செவ்வாய்கிழமை 1500 ரூபாவை இலஞ்சமாகப் பெற்றுக் கொள்ளும் போது அவர் கையுமமெய்யுமாக பிடிக்கப்பட்டார்.

குளியாப்பிட்டிய நீதிவான் முன்னிலையில் அவர் ஆஜர்செய்யப்பட்டபோது நபரை அடுத்த திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ரு-5)

## க.பொ.த (உ/த) பரீட்சை

## தென்மராட்சியில் 6 நிலையங்கள்

(சாவகச்சேரி)

எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பமாக இருக்கும் க.பொ.த.உ/த பரீட்சைக்கு தென்மராட்சியில் ஆறு நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், வரணி மகாவித்தியாலயம், வீரசிங்கம் மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகியனவே பரீட்சை நிலையங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

இதில் முதல் மூன்று பாடசாலைகளுக்கும் கொடி.திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் இணைப்பு அலுவலகமாகவும் அடுத்த மூன்று பாடசாலைகளுக்கும் சாவகச்சேரி இநதுக்கல்லூரி இணைப்பு அலுவலகமாகவும் இயங்கவுள்ளது. (ரு-29)

## கலை இலக்கியப் பெருவிழா!

(கற்கோவளம்)

வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையின் கலை இலக்கியப் பெருவிழா திக்கம் கலாசார மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணிக்கு வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலாளர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக மந்திகை ஆதார வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளையும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் செ.த.கலாமணி, வடமராட்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ந.இன்பனும், கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் கலைஞர்கள் கௌரவிப்பும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. கலைஞர் கௌரவிப்பில், நாடகத்துறை சார்பாக இ.குலசேகரம், இ.பாலசுப்பிரமணியம், க.அருளானந்தன், வை.ஆனந்தன், பே.நந்தகோபால் ஆகியோரும் இலக்கியத்துறை சார்பாக எம்.கே.முருகானந்தனும், இசைத்துறை சார்பாக மா.அருட்செல்வமும் கௌரவிக்கப்படவுள்ளனர். (ரு-5,104)

## கட்டட நிர்மாண எல்லை குறித்து விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேண்டும்

### -பீற்றர் ஹரோல்ட்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் கரையோரப் பகுதிகளில் புதிய வீடுகளை நிர்மாணிக்கும்போது 100 மீற்றர் எல்லை குறித்து விட்டுக்கொடுக்கக் கூடிய கொள்கையொன்றை பின்பற்றவேண்டுமென உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் தெரிவித்துள்ளார்.

தேசத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான செயலணி கொழும்பில் நேற்று நடாத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்முனை உட்பட வடக்கு - கிழக்கின் சில பிரதேசங்களில் காணிகளுக்கான பற்றாக்குறை நிலவுகின்றமையானது பாரிய பிரச்சினையாகும். இதனால் 100 மீற்றர் எல்லை குறித்து விட்டுக்கொடுக்கும் கொள்கை ஒன்றைக் கடைப்பிடிப்பது அவசியம்.

இவ்விடயம் குறித்து உலக வங்கியின் கொள்கைகளில் பிரச்சினை ஏற்படக்கூடிய வாயப்புக்கள் இல்லை. அரசாங்கத்தின் கொள்கை என்னவென்பதிலேயே பிரச்சினை உள்ளது என்றார்.

இதுகுறித்து ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆலோசனைகளையும் யோசனைகளையும் தாம வழங்க முடியுமெனவும் அதை ஏற்பதும் நடைமுறைப்படுத்துவதும் அரசின் நிலைப்பாடு எனவும் அவர் கூறினார்.

சில பிரதேசங்களில் காணிகளுக்குப் பற்றாக்குறை நிலவுவதினால் பாதிக்கப்பட்ட மக்கள் தாம் முன்னர் வசித்துவந்த பிரதேசங்களுக்கு அருகில் அவர்களை குடியமர்த்துவதல் சிக்கல்நிலை ஏற்பட்டுள்ளது. இதே போன்று அப்பிரதேசங்கள் தொடர்பாகவும் கரையோர எல்லைகள் தொடர்பாகக் கொள்கையளவில் விட்டுக்கொடுக்கக் கூடியதும், மனிதாபிமான ரீதியிலுமான திட்டங்களைத் தயாரிப்பதற்கு நாம் எண்ணியுள்ளோம் என்று அவர் மேலும் கூறினார். (ச-8)

## ஊடகவியலாளர் நடேசனின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு

(கொழும்பு)

ஊடகவியலாளர் ஜி.நடேசனின் முதலாம் ஆண்டு நினைவு நாளையொட்டி புதன் கிழமை கொழும்பில் நினைவுக் கூட்டம் இடம்பெற்றது.

ஊடகவியலாளா நடேசன் கடந்த ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி தனது வீட்டிலிருந்து வேலை செய்த அலுவலகத்தை நோக்கி சென்றுகொண்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டார்.

யாழ்ப்பாணம் நெல்லியடியைச் சேர்ந்த நடேசன் மட்டக்களப்பில் வேலை நிமித்தம் அங்கு வாழ்ந்து வந்தார்.

உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களுக்கு செய்திகளை வழங்கிவந்த நடேசன் தான் எழுதிய கட்டுரைகள் மூலம் மக்கள் மத்தியில விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தார். இவர் பத்திரிகைத்துறைக்கு ஆற்றிய சேவைகளைப் பாராட்டி பல விருதுகள் வழங்கப்பட்டன.

அதேவேளை, விடுதலைப்புலிகளினால் நாட்டுப்பற்றாளர் விருது வழங்கியும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வெள்ளவத்தை பெண்கள் ஆய்வுமையத்தில் நடைபெற்ற இந்த ஞாபகார்த்த கூட்டத்தில் ஊடகவியலாளர்கள், கலை இலக்கியவாதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரு-6)

## மாணவர்கள் கௌரவிப்பு

(சாவகச்சேரி)

அண்மையில் நடைபெற்ற க.பொ.த.சா/த பரீட்சையில் 10 பாடங்களிலும் 'ஏ' தர சித்தியெய்திய மாணவர்களுக்கும் ஆங்கில பாடத்தில் 'ஏ' தரம் பெற்ற தென்மராட்சி மாணவர்களுக்கும் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கவுள்ளனர்.

இதற்கான விபரங்கள் தற்போது கழகத்தினரால சேகரிக்கப்பட்டு வருகின்றன. (ரு-29)

## முத்தலிப்பின் படுகொலைக்கு பிரதமர் கடும் கண்டனம்

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முதலாம்தர கட்டளையிடும் அதிகாரியான மேஜர் முத்தலிப் சுட்டுக்கொல்லப்பட்டமையை வன்மையாகக் கண்டிப்பதாக பிரதமா மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முத்தலிப் தாய்நாட்டைக் காப்பதற்காக இராணுவத்தின் ஊடாக அளப்பரிய சேவையாற்றிய அதிகாரியாவார்.

சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் நீண்டகால சமூக பொருளாதார மற்றும் அரசியல் திட்டங்களைச் சீர்குலைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் சதி முயற்சிகளே இவ்வாறான சம்பவங்களாகும்.

இடம்பெற்றுவரும் இவ்வாறான கொலைச் சம்பவங்கள் தொடர்பாக அரசாங்கம் கூடிய கவனம் செலுத்திவருகின்றது.

நாட்டு மக்கள் அனைவரினதும் பாதுகாப்பை ஒரே நிலையில் கவனிக்கும் பொறுபபை அரசாங்கம் கொண்டுள்ளதென்றும் இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்றும் பிரதமரின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரு-8)

## சேவை நலன் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டப் பாடசாலைகளில் அதிபர்களாகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வு பெற்றவர்களான செல்வி.பா.மார்க்கண்டு, செல்வி ஜே.எஸ்.வஸ்தியாம்பிள்ளை, க.ஜெயானந்தன் ஆகியோரின் சேவைநலன் பாராட்டு விழா ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு பாடசாலை அதிபர் எஸ்.சோமஸ்வரபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம், யாழ்.வலய பிரதிக கல்விப் பணிப்பாளா என்.வரதராசா, நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திருமதி. எஸ்.காங்கேயன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (ரு-2)

## தமிழ்த் தினப் போட்டியில் பங்குபற்றுவோர் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

### வில்லுப்பாட்டு திறந்தபோட்டி

நாரந்தனை றோ.கல்லூரி.
புனித திரேசாள் மகளிர் கல்லூரி.
யாழ்ப்பாணக் கல்லூரி.
உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.
சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

### விவாதம் திறந்தபோட்டி

யாழ்.மத்திய கல்லூரி.
யூனியன் கல்லூரி.
தொண்டமனாறு வீரகத்தி.
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
காரை.கலாநிதி தியாகராஜா ம.வி.

### தமிழறிவு வினா விடை திறந்தபோட்டி

யாழ்.மத்திய கல்லூரி.
யாழ்.மகாஜனாக் கல்லூரி.
கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரி.
வரணி மகா வித்தி.
காரை.கலாநிதி தியாகராஜா மகா வித்தி.

### நாட்டுக்கூத்து வடமோடி

கைதடி.நாவற்.அ.த.க.பாடசாலை.

### நாட்டுக்கூத்து தென்மோடி

சென்பற்றிக்ஸ் கல்லூரி.
சங்கானை சிவப்பிரகாச வித்தி.

### நாட்டுக்கூத்து சிந்துநடை

கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தி.
நயினை கணேச வித்தி.
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

### இசை நாடகம்

கரம்.சிறிய புஸ்ப.
வேம்படி மகளிர் கல்லூரி.
மானிப்பாய் மெமோறி.ஆ.பாட
கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தி.

### விசேட கூத்து

விக்டோரியாக் கல்லூரி.
வடம.மத்திய கல்லூரி.
வேலணை மகா வித்தி. (ரு-19)

# உள்ளத்து உறையும் உத்தமனை உலகம் வலம் வந்து உணரலாமா?

''நொடிப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காத பெருமானுடைய



திருவடி வாழ்க" என்ற வாழ்த்தோடு திருவாதவூரடிகள் திருவாசகம் என்னும் தேனைப் பாடத் தொடங்குகின்றார்.

அதே பொருளைத் திருமூலர் மந்திரத் தமிழில், ''உள்ளம் விட்டோரடி நீங்கா ஒருவன் என்று தந்திரமாகப் பாடுவார்.

"உள்ளத்தில் உறையும் உள்ளுறு சோதியை உணராமல், ஒலிக்கும் கடல் சூழ்ந்த உலகத்தை வலம் வந்து பாதங்கள் வருந்த நடந்தும் ஆம் பயன் ஒன்றில்லை என்று அதே திருமூலர் பிறிதோரிடத்தில் அழகாகத் தமிழ் செய்வார்.

ஒன்றாக இருந்தாலும் உள்ளம் அவனுடைய உருவத்தை அறியாது.

உள்ளம் ஒருவனை உள்ளத்தில் அறியாதிருப்பின் உலகத்தில் புறத்தே தேடியும் அறியாது. உள்ளத்தில் உணருமாயின் புறத்தேயும் கண்காணும். மாயை மறைக்க

## வெள்ளி நற்சிந்தனை

ஓதம் ஒலிக்கும் உலகை வலம் வந்து பாதங்கள் நோவ நடந்தும் பயனில்லை.(687)உலகத்தை வலம் வந்தும் கால்கள் கடுத்தும் காணாக் கடவுள் காயத்துள் கரந்துள்ளான்.மூக்குக் கண்ணாடியை நெற்றியின் மீது தள்ளிவிட்டு வீட்டையும் நாட்டையும் சல்லடை போட்டுத் தேடிய கதை அல்லவா இது!

ஒருவன் உள்ளத்துள்ளே ஒளியாக ஒளிருகின்றான். அவன் உள்ளதை விட்டு ஓரடி ஓடமாட்டான். உள்ளமும் உள்ளுறு சோதியும் மறையும் மறைப்பொருள் மாயை மறைய வெளிப்படும். அவன் அருளே கண்ணாகக் காண அரு முயற்சி பண்ணுதல் வேண்டும்.

உள்ளத்தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமுள் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறியாதே. (417)

**சிவ சண்முகவடிவேல்**

# வருடாந்த மஹோற்சவம

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் சந்தி ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்காவனத்துடன் நிறைவு பெறவுள்ளது.

பிரதம குருவாக ஸ்ரீவிஸ்ணு ஸ்ரீ க.ச.சோமஸ்கந்தக் குருக்கள் பணியாற்றவுள்ளார்.

உற்சவ காலத்தில் மாலை நேரங்களில் "திருவருள் வாசகர்" சி.கா.கமலநாதன் ''விநாயகர் பெருமை" எனும் பொருளில் சொற்பொழிவாற்றுவார். (ற-29)

★ ★ ★

(புங்குடுதீவு)

புங்குடுதீவு குறிகட்டுவான் பேச்சி அம்மன் என வழுங்கப்படும் ஜெகன் மாதா மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இதில் 18 ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத் திருவிழாவும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும், 20 ஆம் திகதி திங்கட்கிழமை புங்குடுதீவு சமுத்திர தீர்த்தக் கேணியில் தீர்த்தோற்சவமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும். (ற-126)


## சிறுவிளம்பரம்

### மலையாள பகவதி ஜோதிடாலயம்

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள். விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

**ஹோட்டல் பிள்ளையார் இன்**
**அறை இல.09,**
**31, மானிப்பாய் வீதி**
**யாழ்ப்பாணம்.**
**T.P - 0779122836**
**நேரம் காலை 9.00 -**
(9567) **இரவு 8.30 வரை**


## ஆன்மீக நிகழ்வு

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின்யாழ்மாவட்ட அலுவலகத்தினால் நல்லூர் கந்தசாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நடாத்தப்பட்டு வரும் ஆன்மீகத் தொடர் நிகழவில் இன்று பி.ப6.30 மணிக்கு யாழ்பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மா.தேவநாதன் "தாயுமானவர் தத்துவம்" எனுமவிடயம்பற்றி சிறப்புச் சொற்பொழி வாற்றவுள்ளார். (ற-5)

# பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை ; வட-கிழக்கிலும் அமுல்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் புதிதாக உருவாக்கிய பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையினை வடக்கு- கிழக்கு மாகாண சேவை நிர்வாகத்திலும் அமுல்படுத்துவதற்கு மாகாண பொது நிர்வாக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் வடக்கு-கிழக்கு மாகாண அரச.சேவையில் இணைந்த சேவை உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றும் அலுவலர்கள் வடக்கு-கிழக்கு மாகாண பொது முகாமைத்து உதவியாளர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் கே.பத்மநாதன் இத் தகவலை தெரிவித்துள்ளார்.

புதிய சேவையில் இணைந்து கொள்ள விரும்பும் உத்தியோகத்தர்கள் எதிர்வரும் ஜூலை மாதம் 23 ஆம் திகதிக்கு முன்னர் தமது திணைக்களத் தலைவர்களூடாக விண்ணபிக்குமாறு மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார். (ற-5)

# இராசி பலன்

**03.06.2005**
**(வைகாசி 20, வெள்ளிக்கிழமை)**
**துவாதசி பின்னிரவு 2.57 மணிவரை**
**அச்சுவினி பின்னிரவு 2.49 மணிவரை**
**இராகுகாலம் 10.22- 11.52 மணிவரை**
**சுபநேரம் 5.52 -7.22 மணிவரை**
**அமிர்த சித்தம்.**

| | |
|---|---|
| மேடம் | தெய்வ தரிசனம், காரிய நன்மை, நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம். |
| இடபம் | காரிய அலைச்சல், பிதாசிந்தை, கோபப் படுதல், சுபசெலவு. |
| மிதுனம் | தொழில் சிந்தை, பெருமையடைதல், தெய்வதரிசனம், காரிய நன்மை. |
| கடகம் | சுபநிகழ்வு, கடின முயற்சி, தூரதேசச் செய்தி, தெய்வசிந்தை. |
| சிங்கம் | ஆன்றோர் மதிப்பு, கட்டுப்பாடு, புதிய திட்டமிடல், வீண்பயம். |
| கன்னி | எதிர்பாராத அச்சம், காரிய தடங்கல், பிரயாணக்கஷ்டம், நண்பர்கள் வெறுப்பு. |
| துலாம் | திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, காரிய நன்மை, தெய்வதரிசனம். |
| விருச்சிகம் | பகைவர் நேசம், திடீர் பயணம், பணவரு வாய், முயற்சி கைகூடும். |
| தனுசு | வியாபாரா நன்மை, காரிய இடையூறு, குடும் பக்கவலை, பண விரயம். |
| மகரம் | கல்வியில் ஆர்வம், தன்னம்பிக்கைக் குறைவு, காரிய தாமதம், சுப செலவு. |
| கும்பம் | இனிய சம்பவம், பொருள்சேர்க்கை, பிரயாணநன்மை, நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | மாதர் நட்பு, தொழிலில் மந்த நிலை, முயற்சி தாமதம், பணவிரயம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

-வளவன்

# வறிய தாய் – சேய்க்கு சுகாதாரப் பொதி

(மானிப்பாய்)

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட பகுதியில் வறிய தாய்-சேய்க்கு சுகாதாரப் பொதி வழங்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையினை வலி.தென் மேற்குப் பிரதேசசபை திட்டமிடல் உளளூராட்சி உதவியாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பிரதேசசபைக்குட்பட்ட வறிய தாய் -சேய் விபரம் குறித்து சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி வி.கே.வர்ணநாதன் வழங்கிய பட்டியலுக்கு அமைவாக சுகாதாரப் பொதி வழங்கப்படவுள்ளது.

பற்பசை, பற்தூரிகை, நான்கு வகையான சவர்க்காரங்கள் என்பன வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-150)

# வேலை வாய்ப்புக்காக சவுதி செல்வோருக்கு ஓராண்டு மட்டுமே விசா

(துபாய்)

சவுதி அரேபியா செல்லும் தொழிலாளர்களுக்கு புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. விசா ஒரு ஆண்டுக்கு மேல் நீட்டிக்கப்படமாட்டாது.

சவுதி அரேபியாவில் உள்நாட்டினருக்குக் கூடுதல் வேலைவாய்ப்பை உருவாக்குவும், வெளிநாட்டுத் தொழிலாளர்களை நம்பி இருப்பதை குறைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனால் சவுதியில் இப்போது வேலை செய்து வரும் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை 10 ஆண்டுகளில் 20 சதவீதமாகக் குறைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு புதிய கட்டுப்பாடுகளை சவுதி அரேபியா விதித்துள்ளது. "எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் ஒரு ஆண்டு விசா மட்டுமே தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும். அதற்கு மேல் நீடிக்கப்படமாட்டாது" என்று தொழிலாளர் நல மந்திரி காஜி அல் கோசாய்பீ அறிவித்துள்ளார்.

விசா நீடிப்பு செய்வதைப் பயன்படுத்தி மோசடி நடப்பதாலும், சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாலும் விசா நீட்டிப்பு கைவிடப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

உள்நாட்டு அரேபியர்கள் மத்தியில் வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதில் சவுதி அரேபிய அரசு கவனமாகவுள்ளது. இதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தனியார் நிறுவனங்களில் சவுதி அரேபியர்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு வழங்கவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அரசாங்க காண்டிராக்டர்கள் வழங்கப்படமாட்டாது என்று கடந்த பெப்ரவரி மாதமே சவுதி அரசு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# காங். சீமெந்து தொழிற்சாலையை மீள இயங்க வைக்க நடவடிக்கை

(கொழும்பு)

பதினைந்து ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையை மீண்டும் இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் தலைவர் கடந்த திங்கட்கிழமை தொழிற்சாலையை பார்வையிட்டதன் பின்னர் இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

தொழிற்சாலையை மூன்று கட்டங்களாக அபிவிருத்தி செய்வதற்குத திட்டமிடப்பட்டுள்ளது. தொழிற்சாலையில் முன்னர் பணிபுரிந்த ஊழியர்கள் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

முதலாவது கட்டமாக சீமெந்து எடுத்து வந்த தொழிற்சாலையில் பொதி செய்து குடாநாட்டில் காங்கேசன் சீமெந்து என்ற பெயரில் சந்தைப்படுத்தப்படும்.

இரண்டாவது கட்டமாக சீமெந்து கலவை மேற்கொள்ளும் பணி நடைமுறைப்படுத்தப்படும் மூன்றாவது கட்டத்தில், செயற்படாதிருக்கும் இயந்திரங்கள் திருத்தப்பட்டு உற்பத்தி ஆரம்பிக்கப்படுமென்று கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார்.

சீமெந்துத் தொழிற்சாலையின் கட்டடங்கள் நல்ல நிலையிலிருப்பதாகவும் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்ட மூன்று இயந்திரங்களில் ஒரு இயந்திரம் செயற்படக் கூடிய நிலையிலிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை பாதுகாப்பு வலயத்தினுள் அமைத்திருப்பதனால் அதனை மீள இயக்குவது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட இருக்கின்றது. (ற-5)

# அமெ.அரச பிரதிநிதிகளுடன் கஜேந்திரகுமார் எம்.பி பேச்சு

(அமெரிக்கா)

அமெரிக்காவுக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அந்நாட்டின் அரசாங்க பிரதிநிதிகள் உட்பட பலரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச்சந்திப்புகள் இதயபூர்வமாகவும், காத்திரமாகவும், சாதகமாகவும் அமைந்தன என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள்,சிரேஷ்ட செனட்டர்கள், அமெரிக்க காங்கிரஸ் பிரமுகர்களையும் சந்தித்து இவர் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

புள்ளிவிபர சர்வதேச ஆய்வு மைய அதிகாரிகள், வாஷிங்டன் சிந்தனையாளர்கள் ஆகியோரையும் இவர் சந்தித்தார். வாஷிங்டனில் இயங்கும் தெற்காசியாவுக்கான ஆலோசனை சபையில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றிலும் "ஜனநாயகமும் அபிவிருத்தியும்'' என்னும் தலைப்பில் இவர் சொற்பொழிவும் ஆற்றியுள்ளார்.

அமெரிக்க அதிகாரிகளுடன் தான் மேற்கொண்ட கருத்துப் பரிவர்ததனைகள் குறித்து அவர் குறிப்பிடும்போது, இவை பொரும்பாலும் சாதகமாக அமைந்தன. இது கண்டு பெருமிதடைந்தேன். அமெரிக்க அதிகாரிகள் இலங்கையில் நிலவும் நிலைவரம் தற்போது நன்றாகத் தங்களுக்குப் புரிவதாகத் தெரிவித்தனர் என்றார். (ற-4)


**மிகவிரைவில் எதிர்பாருங்கள் உங்கள் வலம்புரியில்**

- ✱ மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி
- ✱ சித்திரப் போட்டி
- ✱ புகைப்படப் போட்டி
- ✱ சிறுகதைப் போட்டி

**பெறுமதி மக்க பரிசில்களை வெல்லத் தயாராகுங்கள்**

**விபரம் மிகவிரைவில் உங்கள் வலம்புரியில்.**

# இன்று ஒரு தகவல்

## சாமர்த்தியம்

பாட்டு எழுதுபவர்களுக்கெல்லாம் பாட்டு எழுதும் சாமர்த்தியம் மட்டும் இருந்தால் போதாது. பரிசு வாங்கும் சாமர்த்தியம் இருக்க வேண்டும். அந்தக் காலத்திலேயே பலபேரிடம் இது இருந்தது. சுலபமாக பரிசு கொடுத்துவிட வேண்டும் என்று யாரும் நினைப்பதில்லை. நாம்தான் முயற்சிசெய்து அதை வாங்கவேண்டும்.

மாலை போடுவதற்காக ஒருவர் அருகே வருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள் அவராக வந்து கழுத்தில் போடுவதைவிட நாமாக அதை வாங்கி நமது கழுத்தில் போட்டுக் கொள்வதுதான் இந்தக் காலத்தில் நல்லது. இல்லாவிட்டால் கடைசி நிமிடத்தில் அவர் மனம் மாறிவிட்டால் என்ன செய்வது, அதனால் இதுபோன்ற ரிஸ்க்கெல்லாம் எடுக்கக்கூடாது.

அந்தக் காலத்தில் கொடுக்கும் மனதுள்ள அரசர்களும் நிறையப் பேர் இருந்தனர். வருபவர்களை எப்படி ஏமாற்றலாம் என்று கணக்குப்போட்ட மன்னர்களும் சிலபேர் இருந்தனர்.

ஒரு அரசன் இருந்தான். மகாகஞ்சன். கொடுப்பதென்றால் மிகவும் கஸ்டப்படுவான். ஆனால் அவரிடம் ஒரு சாமர்த்தியம் இருந்தது. அதாவது அவன் ஒரு ஏகசந்த கிரவறி அப்படியென்றால் அவன் ஒருமுறை ஒரு பாட்டைக் கேட்டுவிட்டான் என்றால் அப்படியே அடி பிசகாமல் திருப்பிச் சொல்லிவிடுவான். அந்த அரசனிடம் ஒரு வேலைக்காரன் இருந்தான். அவன் ஒரு 'துவிசந்தகிரகி' அதாவது இவன் எதையும் இரண்டுமுறை கேட்டான் என்றால் அப்படியே திருப்பிச் சொல்லிவிடுவான். அந்த அரண்மனையில் ஒரு வேலைக்காரியும் இருந்தாள். அவள்... திரிசந்த மூன்றுதடவை கேட்டால் திருப்பிக் கூறிவிடுவாள்.

இந்த மூன்றுபேரும் சேர்ந்து கொண்டுவரும் புலவர்களையெல்லாம் படாதபாடு படுத்திக் கொண்டிருந்தார்கள். யாராவது ஒரு புலவர் ஒரு பாட்டைப் பாடிக்கொண்டு பரிசு வாங்குவதற்காக வருகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். உடனே அந்த அரசன் என்ன சொல்வான் தெரியுமா? "இதோ பாரப்பா... நீ எழுதிக்கொண்டுவந்த பாட்டு நீயே சொந்தமாக எழுதியதாக இருந்தால் அந்தப் பாட்டு எழுதப்பட்டிருக்கும் ஏட்டின் எடை அளவுக்குப் பொன் தருவேன். அப்படி இல்லாவிட்டால் ஒனறும் கொடுக்கமாட்டேன். அதுமட்டுமல்ல... உன்னிடம் இருப்பதை எடுத்துக் கொண்டுதான் விடுவேன்" என்பான்.

இந்த நிபந்தனையுடன் தான் புலவர்களைப் பாடச்சொல்வான். புலவர் பாடுவார். பாடி முடித்தவுடன் அந்த அரசன் பலே... இந்தப் பாட்டு மிகவும் அருமையாக இருக்கிறது. ஆனால் இதற்கு முன்பாகவே ஒருவர் இதைப் பாடியிருக்கிறார். நான் கேட்டிருக்கிறேன்" என்பான். புலவர் அதிர்ச்சியாகி நிற்பார்.அந்த அரசன்தான் 'ஏகசந்த இரவஹி'யாயிற்றே அதனால் உடனே அந்தப் பாட்டை அடி பிசகாமல் திருப்பிக்கூறுவான். கூறிவிட்டு "இதுமட்டுமல்ல இந்தப் பாட்டு எனது வேலைக்காரனுக்குக் கூடத் தெரியும்"என்பான்.

உடனே வேலைக்காரனைக் கூப்பிட்டுப் பாடச் சொல்வான். அவன் தான் இரண்டுதரம் கேட்டுவிட்டால் திரும்பச் சொல்லிவிடுவானே வந்து நின்று கடகடவென்று ஒப்பித்துவிடுவான்."எனது வேலைக்காரிக்கும் இந்தப் பாடல் தெரியும் "என்பான் அரசன். அவள் ஒரு திரைமறைவில் ஒளிந்திருந்து மூன்றுமுறை பாட்டைக் கேட்டிருப்பாள். அதனால் தயக்கமில்லாமல் முன்னால் வந்துநின்று அந்தப் பாடலைப் பாடிக்காட்டுவாள். புலவர் அதிர்ச்சியாகி நின்றுவிடுவார். "என்ன புலவரே! பழைய பாட்டைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்?" என்று கத்திவிட்டு அந்தப் புலவர் ஏதாவது கொண்டுவந்திருந்தால் அதையும் பறித்துவிட்டு விரட்டிவிடுவான்.

இப்படியே நீண்டகாலமாக நடந்துகொண்டிருந்தது. ஒரு சாமர்த்தியமான புலவர் இதைக் கேள்விப்பட்டு என்ன வழி என யோசித்தார். உடனே பெரியதொரு கவிதையை எழுதினார். முடுகு சந்தம் கரடுமுரடான அமைப்பு நூறு முறை சொன்னாலும் மனதில் பதியாது. அப்படிப்பட்ட பாட்டை எழுதித் தயார்செய்து கொண்டார். இரட்டை மாட்டு வண்டிலில் வந்து அரண்மனை வாசலில் வந்து இறங்கினார். மன்னரைப் பார்த்து வணங்கினார். மன்னன் நிபந்தனையைச் சொன்னான்.

"பாட்டு உமது சொந்தப் பாட்டாக இருந்தால் அந்தப் பாட்டை எதில் எழுதியிருக்கிறாயோ அதை அப்படியே எடைபோட்டு அந்தளவுக்கு பொன் தருவேன். அது பழைய பாட்டாக இருந்துவிட்டால் உம்மிடம் இருப்பதையும் வாங்கிவிட்டுத்தான் விடுவேன்" என்றான்.புலவர் சரி என்று ஒத்துக்கொண்டு பாடினார்.

மிகவும் கடுமையான சந்தமுள்ள முடுகு கவியை மன்னனால் மனதில் வாங்கிக்கொள்ள முடியவில்லை திகைத்துப் போய்நின்றுவிட்டான். திருதிருவென்று விழித்துக்கொண்டே வேலைக்காரனைப் பார்த்தான். அவன் இதைவிட அதிகமாக விழித்துக்கொண்டிருந்தான். வேலைக்காரி பார்த்தாள். நம்மால் முடியாது என்று சொல்லி நழுவிப் போய்விட்டாள்.

வேறு வழியில்லை. புலவரே இது உமது பாடல்தான். ஒத்துக்கொள்கிறோம். ஏட்டைக் கொடுங்கள் எடைபோட்டு பரிசு தருகிறோம் என்றான் மன்னன் ."மன்னா ஏடு வண்டிலில் உள்ளது. அதை இறக்கி எடுத்துவர 10பேர் வேண்டும். 10பேரும் பலசாலியாக இருக்கவேண்டும்" என்றார். அரசனுக்கு அதிர்ச்சி. "என்ன ஒரு பனைஓலைக் கட்டைத் தூக்க 10பேரா?"என்றான். "மன்னா... நான் இந்தப் பாட்டைப் பாடிய போது பக்கத்தில் பனை ஏடு கிடைக்கவில்லை. 10சதுர அடி அளவில் கருங்கல் ஒன்று இருந்தது. அதில் எழுதிவிட்டேன். உன்புகழ் என்றும் அழியாமல் இருக்கவேண்டும் என்பதற்காக ஆழமாகவே செதுக்கிவிட்டேன்" என்றார்.

வேறுவழியில்லாமல் அதைத் தூக்கி வந்து எடைபோட்டுப் பார்த்துவிட்டு பொக்கிஷத்தில் இருந்த பொற்காசையெல்லாம் கொடுத்து அனுப்பிவிட்டான். அந்த மன்னன் என்ன செய்வது? இதுதான் பரிசு வாங்கும் சாமர்த்தியம். இந்தக் கதையைக் கேட்டுவிட்டு இந்தக் காலக கவிஞர் ஒருவர் மிகவும் ஏக்கமாக ஒரு விஷயத்தைச் சொன்னார்.

"கருங்கல்லில் எழுதினால்தான் எடை அதிகமாக இருக்குமென்றில்லை சார். நான் எனது கவிதையெல்லாம் வெறும் காகிதத்தில் தான் எழுதிவைத்திருக்கிறேன். அதை எடைபோட்டால் கூட அந்தக் கருங்கல் அளவுக்கு இருக்கும்" என்றார். "எடைக்குஎடை ஏதாவது வாங்குவதுதானே" என்றேன். "அதுதான் பார்க்கிறேன் அந்த ஆள் கொஞ்சநாளாக வரவில்லை" என்றார். "யார்?" என்று கேட்டேன். "பேரீச்சம்பழக் கடைக்காரர்" என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# பிள்ளையார் கோவில் வளவில் புத்தர்சிலை; வன்னி எம்.பிக்கள் நிலைமையை ஆராய்வு

(வவுனியா)

வவுனியா ஓமந்தைப் பிள்ளையார் கோவில் காணியில் புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளதால் எழுந்துள்ள குழப்ப நிலைகுறித்து நேரில்கண்டறிவதற்காக வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் அங்கு பொது மக்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கடந்த இரண்டு வாரங்களாக இந்த ஆலயத்தில் பூஜைவழிபாடுகள் நடைபெறவில்லை என அப்பகுதி மக்கள் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தனர்.

ஆலயக் காணியின் உறுதிப்பத்திரத்தினைத் தரவேண்டும் என்றும் படையினர் ஆலயக் குருக்களிடம் தொல்லை கொடுத்து வந்ததாகவும், இதனால் அவர் ஊரைவிட்டு யாழ்ப்பாணத்துக்கு சென்றுவிட்டதாகவும் ஓமந்தை வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தக்கோவில் காணியில் புத்தர் சிலையினை நிறுவியதுடன் அங்கு புராதன பௌத்த ஆலயம் இருந்ததாகக் காட்டும்வகையில் அறிவித்தல் பலகையொன்றினையும் படையினர் வைத்ததாகப் பிரதேச வாசிகள பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளனர்.

இவ்விவகாரம் தொடர்பாக வன்னிப் பிராந்தியப் பொலிஸ்மா அதிபர், வன்னிப் பிராந்திய ஆயுதப் படைகளின் தலைமையக அதிகாரிகள் ஆகியோருடன பேச்சுவார்த்தை நடாத்தியதாகவும் இப்பிரச்சினைக்கு சுமுகமான முறையில் தீர்வுகாண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவ்வதிகாரிகள் தம்மிடம் தெரிவித்ததாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

(ரு-4)

# கட்டட நிர்மாணத்திற்கான எல்லைகுறித்து ஆராய விசேட குழுவொன்று நியமனம்

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 100 மீற்றர் எல்லைக்குள் கட்டடங்களை அமைப்பது தொடர்பான கொள்கை குறித்து புதிய யோசனைகளை முன்வைப்பதற்காக விஷேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தேசத்தை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைச் செயலணியின் தலைவர் மனோதித்தவெல தெரிவித்துள்ளார்.

மனோதித்தவெல இதுவிடயம் குறித்து மேலும் தெரிவிக்கையில்,

இந்தக்குழுவின் யோசனைகள் 4 வாரகாலப் பகுதிக்குள் முன்வைக்கப்படும். பின்னர் அந்த யோசனைகள் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு முடிவெடுக்கப்படும்.

கரையோரப் பாதுகாப்பு எல்லை தொடர்பான எமது கொள்கை தெளிவானது. 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் எல்லைக்குள் கட்டட நிர்மாணத்துக்கு விதிக்கப்பட்ட தடையில் எவ்வித மாற்றமுமில்லை.

சில பகுதிகளில் காணிப்பற்றாக்குறை காணப்படுகின்றது என்பதனை ஏற்றுக்கொள்கின்றோம். இதனாலேயே மக்களை மீளக்குடியமர்த்தும் போது கரையோரப் பாதுகாப்பு எல்லையை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது.

இதுகுறித்து ஆராய்வதற்கென குழுவொன்று நியமித்துள்ளோம். ஏனெனில் மக்களின் பாதுகாப்புத் தொடர்பாக அரசு உன்னிப்பாகவுள்ளது.

இதனால் விசேட பிரதேசங்களுக்காக விசேட பாதுகாப்பு நடவடிக்கை அத்தியாவசியமானவை. எனவே, இதுகுறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியமாகும் என்றார்.

(ரு-8)

# தனியார், சர்வதேசப் பாடசாலைகளின் செயற்பாடுகளை ஆய்வுசெய்ய நடவடிக்கை

(கொழும்பு)

தனியார் மற்றும் சர்வதேசப் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகளை மதிப்பிடவும், ஆய்வுகளை மேற்கொள்ளவும் விசேட நடவடிக்கைகளை ஆரம்பிக்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

நிர்வாகச் சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள 220 தனியார் மற்றும் சர்வதேசப் பாடசாலைகள் தற்சமயம் இயங்கி வருவதாக கல்வியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலைகளில் கணிசமானவை பரீட்சைகளை மாத்திரமே இலக்காக வைத்து செயற்படுவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய தனியார், சர்வதேசப் பாடசாலைகளில் கல்வியை வழங்குவதற்குப் போதுமான கல்வி சார் ஊழியர்கள் இல்லையென்றும் கல்வியமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி இந்தப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களையும், அதிபர்களையும் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவும் கல்வியமைச்சின் திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தவும் இந்தப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ரு-9)

# 'இலங்கையில் ஆசிரியர்களின் உரிமைகள்' நாளையும் மறுதினமும் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கல்வியகம், பிரட்ரிக் ஈபேர்ட் மன்றம் மற்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியன இணைத்து நடத்தும் "இலங்கையில் ஆசிரியர்கள[illegible] உரிமைகள்" என்னும் தலைப்பிலான கருத்தரங்கு நாளையும் நாளை மறுதினமும் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப.5.00 மணிவரை நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கிற்கு பிரட்றிக் ஈபேர்ட் மன்றத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி செல்வி அடேல் பெக்கர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இக்கருத்தரங்கில் அண்மையில் புதிதாக நியமனம் பெற்ற 50 ஆசிரியர்கள் பங்குதாரர்களாகக் கலந்து கொள்வர்.

இக்கருத்தரங்கின் வள ஆளணியினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம்,இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம், சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம், யாழ்.இந்துமகளிர் கல்லூரி அதிபர் திருமதி ச.ஜெயராசா, வேலணை வைத்திலிங்கம் துரைசுவாமி மகாவித்தியாலய அதிபர் பொ.அருணகிரிநாதன், யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலய அதிபர் க.கனகசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ரு-19)

## கூட்டம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப.3.30 மணிக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் மாவட்டத்தலைவர் வ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல கிளைகளதும் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் தாய்ச் சங்க நிர்வாகிகள், வலய, மாவட்ட அமைப்புக்களின் தலைவர், செயலாளர் ஆகியோரைத் தவறாது இக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு மாவட்டச் செயலாளர் க.குமாரசாமி அழைப்புவிடுத்துள்ளார்.

(ரு-19)

# அங்கர்-400 கிராம் பக்கற்றின் விலை 5 ரூபாவால் குறைப்பு

**மேலும் 15ரக பால்மாக்களும் விலை குறைப்பு**

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் அரசாங்கத்தின் செயற்திட்டத்தின் கீழ் சகல பால்மாக்களின் விலைகளையும் குறைப்பதற்கான முன்னோடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அங்கர் பால்மா நிறுவனத்துடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையின் பயனாக அந் நிறுவனத்தின் உற்பத்திகள் விலை குறைப்புச் செய்யப்பட்டுள்ளதாக மேற்படி அதிகார சபையின் தலைவர் கலாநிதி எம்.ஐ.எம்.மூசின் தெரிவித்தார்.

இதன்படி அங்கர் பால்மா 400 கிராம் பக்கற் ஐந்து ரூபாவினால் விலை குறைக்கப்பட்டுள்ளதுடன், அதனோடு சேர்ந்த மேலும் பதினைந்து ரக பால்மாக்களின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன.

அங்கர் பால்மா நிறுவனம் ஏற்கனவே தமது உற்பத்திகளுக்குப் பதினைந்து வீத விலையதிகரிப்பைச் செய்திருந்தது. இதனையடுத்து அதிகரிக்கப்பட்ட விலையை குறைக்கக்கோரி நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அந் நிறுவனத்தைக் கோரியிருந்தது.

இதற்கமையவே ஐந்து வீத விலைக்குறைப்பு இடம்பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ரு-9)

# தமிழகப் பயணம்

## பயணக் கட்டுரை

## 2500 ரூபா காஞ்சிபுர சாறி 1000 ரூபாவுக்குக் கிடைத்தது

### என்.விஜயன்

9 காமாட்சி கோவிலுக்கு அடுத்தபடியாக ஏகாம்பரநாதர் கோவல் காஞ்சிபுரத்திற்கு பெருமைசேர்ப்பதாக அமைந்துள்ளது. ஆட்டோ சாரதி ஏகாம்பரநாதர் கோவிலில் வண்டியை நிறுத்தினார். மிகப் பிரமாண்டமான இராஜகோபுரத்தின் கட்டுமானப்பணிகள் பூர்த்தியாகும் நிலையில் இருந்தது.

கோபுரத்தின் கட்டுமான மறைப்பு துப்பட்டி அணிந்த மணப்பெண்போல காட்சிதந்தது. ஏகாம்பரநாதா! ஈசா! நீயேதுணை. உள்ளம் உருகிக்கொள்ள ஆட்டோவில் இருந்து இறங்கினோம். இறங்கியது தான் தாமதம்இரண்டு மூன்று பேர்ஓடி வந்து கையைப்பிடித்து வாங்க வாங்க என்று வரவேற்றனர்.

வாங்க... வாங்க... என்று தமிழகத்தில் யாரேனும் வ்ரவேற்றால் அது பணத்தோடு சம்பந்தப்பட்ட சமாச்சாரமாகவே இருக்கும் என்பதை ஓரளவுக்குப் புரிந்து வைத்திருந்தோம்.

ஆனால் கோவில் வாசலுக்கு போவதற்கு முன்னரே இவர்கள் வரவேற்கிறார்களே! யாராக இருக்கலாம்.

விடை தேடுவதற்கு சந்தர்ப்பமே வழங்காமல் அவர்களே தம்மை இனங்காட்டிக்கொண்டார்கள் 'சார்-இங்க வாறவங்கஎல்லாரும் நம்மட்டத்தான் சாறி எடுப்பாங்க. ஒரிஜனல்காஞ்சிப்பட்டு...' கூறிக்கொண்டே கடைவாசல் படிகளில் ஏறினார். செல்லப்ப சுவாமிகளுக்கு பின்னால் சென்ற யோகர்சுவாமிகள் போல நாமும் அந்த ஆளுக்குப்பின்னால் போய்க் கொண்டிருந்தோம்.

கோவிலுக்குச் செல்ல வந்த எம்மை தடுத்தாட்கொண்டது எதற்காக என்பதைப்புரிந்து கொண்டோம். கதிரவனின் உச்சம் தந்த களைப்பு கடையில் இளைப்பாறுவதற்குச் சம்மதம் தெரிவித்தது.

'டேய்என்னபார்த்துக்கிட்டு இருக்கே அந்தப்பாயை எடுத்து விரியேன்' கடையில் நின்ற பணியாளருக்கு நம்மைக் கூட்டிச்சென்றவர் கட்டளையிட்டார்.

காஞ்சிபுரத்தில் உள்ள புடைவைக் கடைகளில் பாயில் அமர்ந்திருந்தே புடைவைகளைப் பார்ப்பது வழக்கம். யாரேனும் எழுந்து நின்றால் அது கடைஉரிமையாளர்களுக்கு பிடிக்கவே பிடியாது. 'ஏகாம்பரநாதா' எல்லாம் உன்செயல் நா உச்சரிக்க பாயில் அமர்ந்துகொண்டோம். கடைக்காரரும் ஏகாம்பரநாதா... என்றவாறே பாயில் அமர்ந்து கொண்டார்.

இருதரப்பும் ஏகாம்பரநாதனை அழைத்தாலும் அதற்கான காரணங்கள் வேறுபட்டிருந்தன. களைத்துப்போன நமக்கு குளிர்மையான இடத்தில் பாய் தந்து அமரவைத்தமைக்காக ஏகாம்பரநாதனை நினைத்துக் கொண்டோம்.

கடைக்காரரோ, சிலோனில இருந்து நம்மகடைக்கு வந்திருக்கிறாங்களே! காஞ்சிபுரச்சாறி வாங்காமலா போவாங்க அதற்காக அவன் நாமத்தை கூறியிருக்க வேண்டும் என நினைக்கின்றேன். கடை உரிமையாளர் எமக்கெதிரே பாயில் அமர்ந்ததும் திரௌபதியின் துயில் உரிந்தபோது கண்ணபிரானின் அருளால் குவிந்த சாறிகள்போல நமக்கு முன்னே காஞ்சிபுரசாறிகள் குவிந்தன. இது ஒரு இளைப்பட்டு, அது மூன்று இளைப்பட்டு சாறிகளின் தரங்களை வகைப்படுத்திக் கூறினார்.

இவ்வளவு சாறிகளையும் மடித்து வைப்பது பெரும்வேலையாக இருக்கப் போகின்றதே, என்ற ஆதங்கத்தில் போதும் போதும் என்று தடுத்தோம். அவர்கள் நிறுத்துவதாக இல்லை. பிஸ்னஸ் எண்டா அப்படித்தாங்க. எல்லாச் சாறிகளையும் பாருங்க, பிடிச்சத்த எடுத்துக்கொள்ளுங்க, லாவகமாக கடைக்காரர்கதைத்தார். வில்லங்கத்தில மாட்டுப் பட்டதுபோல இருந்தது.

இவ்வளவு சாறிகளை காட்டிய பின்னரும் ஒன்றையாவது வாங்கிக்கொள்ளாவிட்டால் அது நாகரீகமாக இருக்காது அல்லவா? அதற்காக ஓரிரண்டு சாறிகளை எடுப்பது எனத்தீர்மானித்தோம்.

காஞ்சிபுரத்தில் பட்டுச்சாறி எடுக்கக் கூடாது. அங்க ஏமாற்றிப்போடுவாங்க என யாரோ கூறியது காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது. அதனால் மிக விழிப்பாக இருந்து கொண்டோம்.

### ஆச்சரியமாக இருந்தது

சிலோனில இருந்து வந்ததால, பத்துப் பதினைந்து சாறிகளையாவது எடுப்பார்கள் என்பது கடைக்காரரின் உள்நோக்கம். ஆனால் காஞ்சிபுரத்தில் சாறி வாங்காமல் தவிர்ப்பது எமது நோக்கம். இந்த இரண்டு முரண்பட்ட சிந்தனைகளுக்கும தீர்வுகாண்பதற்கு இருக்கக்கூடிய ஒரே வழி சாறிகளின் விலையை குறைத்துக் கேட்பதுதான் என்ற முடிவை எங்களில் இருந்த எல்லோரும் ஏகமனதாக எடுத்திருந்தோம்.

மனதைக் கவரக்கூடிய ஒரு சாறியை காட்டி இதை எடுங்க என்றார் கடைக்காரர். வேண்டா வெறுப்பாக என்னவிலை என்று கேட்டோம். இரண்டாயிரத்து ஐந்நூறு என்றார். இரண்டாயிரத்து ஐந்நூறா...? முகத்தைச்சுழித்துக் கொண்டு ஆச்சரியமாகக் கேட்டோம். கடினப்பட்டு வரவழைத்த முகபாவனையை புரிந்துகொண்ட கடைக்காரர் நீங்க கேளுங்க... சொல்லி முடிப்பதற்குள் எங்களில் இருந்த ஒருவர் ஆயிரமெண்டால் எடுக்கலாம் என்றார்.

என்ன ஆச்சரியம், ஆயிரம் ரூபாவிற்கே சாறியைத்தந்து விட்டார். இரண்டாயிரத்து ஐந்நூறு சொல்லப்பட்ட சாறி ஆயிரம் ரூபாவிற்கு வாங்கப்பட்டது. சாறியை வாங்கியவருக்கு ஆயிரம் ரூபாவுக்கு கிடைத்தது மகிழ்ச்சியைத் தரவில்லை. இன்னமும் குறைத்துக்கேட்டிருக்கலாமோ என்ற ஆதங்கம் அவருள் குடிபுகுந்து குழப்பத்தை ஏற்படுத்தியது.

மனித மனம் அங்கலாய்ப்பதில் தவறில்லை. மேலும் ஓரிரண்டு சாறிகளை வாங்கிக்கொண்டு கடையைவிட்டு வெளியேறினோம். நாம் வெளியேறுவதைப்பார்த்த ஏனையகடைக்காரர்கள் கையைக் காட்டி அழைத்தனர்.

போதுமடாய்யா, ஏகாம்பரநாதர் கோவிலுக்குள் அவசரமாக புகுந்து கொண்டோம்.

(திங்கள் வளரும்)

## 32 000 சமயாசமய ஊழியர்களுக்கு ஜுலை – 1 முதல் நிரந்தர நியமனம்

(கொழும்பு)

அரசாங்க சேவையில் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள 32 ஆயிரம் பேர் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் நிரந்தரமாக்கப்படவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

அரசாங்க திணைக்களங்கள், சபைகள் என்பவற்றில் தற்காலிகமாக இணைந்த ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுபவர்களே இவ்வாறு நிரந்தரமாக்கப்படவுள்ளனர்.

இதற்கான அமைச்சரவை அனுமதிப் பத்திரம் தாக்கல்செய்யப்பட்டு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். இம்மாதம் 30 ஆம் திகதியன்று தொடர்ச்சியாக 180 நாள் சேவையாற்றிய ஊழியர்களே இவ்வாறு நிரந்தரமாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டிலுள்ள பல அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களில் ஏராளமானோர் நிரந்தரமின்றி சேவையாற்றி வருவதாகத் தெரிவித்த அவர், அவர்களிடமிருந்து சிறப்பான சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ந-9)

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் வெளிக்கள ஆய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக 3 ஆம் வருட திட்டமிடல் கற்கைநெறி மாணவர்கள், யாழ்ப்பாண நகர மையப்பகுதியில் ஏற்பட்டுவரும் அபிவிருத்திகளையும், எழுந்துள்ள பிரச்சினைகள் சம்பந்தமாகவும் நாளை பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, கலாநிதி அன்ரனிராஜா ஆகியோர் தலைமையில் வெளிக்களஆய்வு செய்யவுள்ளனர். இவ்ஆய்வுக்கு அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு கோட்கப்பட்டுள்ளது.

(ச)

## முத்தலிப்பின் படுகொலை தொடர்பில் இதுவரை இருபது பேர் கைதாகினர்

புலனாய்வுப் பிரிவின் கட்டளை அதிகாரி லெப்.கேணல் முத்தலிப்பின் படுகொலை தொடர்பாக இதுவரையும் சந்தேகத்தின்பேரில் 20 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இப்படுகொலைச் சம்பவத்தை நேரில் கண்டவர்களும், ஸ்தலத்திற்கு அருகே வசிக்கும் மக்களும் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களமும் பிரத்தியேகமான விசாரணைகளைத் தொடங்கியுள்ளது. சம்பவம் நடந்த சமயம் முத்தலிப்பின் மெய்ப்பாதுகாவலர்கள் பிரசன்னமாகியில்லாதிருந்தது ஏன் என்பது பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-2)

## இன்னும் சில நாட்களில் ஜனாதிபதி பொதுக் கட்டமைப்பில் கைச்சாத்திடுவார் –டிலான் பெரேரா

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பொதுக்கட்டமைப்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்னும் சில நாட்களில் கையெழுத்திடுவார் என்று துறைமுகம் மற்றும் விமானத் துறை பிரதி அமைச்சர் டிலான் பெரேரா உறுதியளித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடப்படுமா?என்பது பிரச்சினையே அல்ல. எப்போது கையெழுத்திடுவது என்பதுதான் விடயம். எனினும் இது விரைவில் கையெழுத்திடப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு தரப்புக்களிலிருந்து எதிர்ப்புக்கள் வந்தாலும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது நிலையிலிருந்து மாறமாட்டார் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜே.வி.பியின் பொதுக்கட்டமைப்பிற்கான மாற்றுயோசனை குறித்த கேள்விக்குப் பதிலளித்த பெரேரா, விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இதில் முக்கிய அங்கம்வகிக்கின்றனர். அவர்களுடன் இணைந்தே செயற்படமுடியும் என்பதைத் தவிர வேறுவழியில்லை என்பதையும்தெளிவுபடுத்தியுள்ளார்.(ந-9)

# ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள் 10

## கலாநிதி செ.திருநாவுக்கரசு

''ஆரம்ப கட்டத்திலே இந்தியத் தமிழர் குறித்த கரிசனையோ அவர்கள் இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்படவேண்டுமென்றோ எவரும் பிரச்சினைப்பட்டுக் கொள்ளவில்லை. அவர்கள் சமூக, பொருளாதார அரசியல் உரிமைகள் அற்று தொழிற்சங்கங்களோ வேறுவகையான இயக்கங்களோ இல்லாமல் மலைநாட்டில் புவியியல் ரீதியாகத் தனிமைப்படுத்தப்பட்டு சிறைப் பிடிக்கப்பட்ட தொழிலாளர் கூட்டமாக இருக்கும்வரை அவர்களது பெரும் எண்ணிக்கையைப் பற்றி எவரும் கவலைப்படவில்லை. அவர்கள் எத்தகைய கண்டிப்புக்கும் ஆளாகவில்லை. அவர்கள் அரசியல் ரீதியாக முன்னெடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும் வர்க்க ரீதியாக சிங்கள விவசாய தொழிலாளருடன் ஒன்றுபட முனைவர் என்ற எண்ணம் வலுவடைந்த போதும் இயல்பான சமூக, அரசியல், பொருளாதார மேலுந்தல் ஏற்பட்டபோதும் அரசியல் யாப்பு சீர்திருத்த விவாதங்களில் சர்வஜன வாக்குரிமை பற்றிய பிரச்சினை எழுந்தபோதும் இவர்கள் இடதுசாரிகளைச் சார்ந்து செயற்பட முயற்சித்த போதுமே இந்தியத் தமிழர் குறித்த ஒரு பயமுறுத்தல் இனரீதியான கண்ணோட்டத்துடன் மட்டுமன்றி வர்க்க ரீதியான பார்வையுடனும் சிங்களப் பேரினவாதிகளினால் பேரின மக்கள் மத்தியில் பொறியாகப் பற்ற வைக்கப்பட்டது.

குடியுரிமைச் சட்டங்கள் பற்றிய சில அரசியல்வாதிகளின் கருத்தோட்டங்களை அறிவதன் மூலம் அவர்களது நிறுவனரீதியான மனப்பாங்குகளையும் தெரிந்துகொள்ள முடியும். ''இன்று மலையகத் தமிழர்களுக்கு நாளை எங்களுக்கு'' எனத் தீர்க்க தரிசனத்துடன் கூறிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள், தாம் சார்ந்திருந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைமை, ஜி.ஜி.பொன்னம்பலம் தலைமையில் இப்பாதகமான சட்டங்களுக்கு ஆதரவாக அமைந்தமை கண்டு, தமது சார்புக் குழுவினருடன் கட்சியைவிட்டு வெளியேறிப் புதிதாக 1949இல் இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் (சமஷ்டி) தாபித்தமை இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஓர் திருப்புமுனையாக அமைந்தது எனலாம். பிரதிநிதிகள் சபையில் 10.12.1948இல் செல்வநாயகம் அவர்கள் பேசுகையில் பின்வருமாறு கூறினார்.

> ''இச்சட்டமூலத்தினால் தோட்டங்களிலுள்ள இந்தியத் தொழிலாளர் நாட்டினம் அடிமை வகுப்பினராக, அடிமைகளாக, குடியுரிமை அற்ற மக்களாக மாற்றப்படுவர். இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நவீன வழிகளையே கையாளவேண்டும். சமூகங்களுக்கு இடையே நீதியும், நியாயமும் வழங்கும் கோட்பாடுகளின் அடிப்படை மீது இப்பிரச்சினை விடுவிக்கப்பட வேண்டும். இவ்வாறு நீங்கள் செய்யாவிட்டால், இரண்டில் ஒன்றுதான் நடக்க முடியும். ஒன்றில் ஒரு சமூகத்தை அழித்து ஒழிப்பீர்கள், அல்லது வகுப்புவாதப் போராட்டத்தை மோசமாக்குவீர்கள்''

இந்தியத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான சட்ட மூலங்களின் சூத்திரதாரியும் சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமருமான டி.எஸ்.சேனநாயக்க

> ''இது எளிமையான சட்டமாயிருந்தாலும், மிக முக்கியமான சட்டமாகும். எவரது நலன்களுக்கும் நாம் தீங்குவிளைவிக்க எண்ணவில்லை. வேறுஒரு நாட்டின் பிரஜைகளல்லாத இலங்கையிலுள்ள மக்களுக்கு பிரஜா உரிமை வழங்க முயற்சிக்கின்றோம். எமது சொந்தப் பிரஜாவுரிமைச் சட்டங்களை வைத்திருப்பது அவசியமானதாகும்.''

எனத் தமது உள்ளார்ந்த நோக்கங்களை மறைக்கும் விதத்தில் கருத்து வெளியிட்டார். ஒரு காலத்தில் வர்க்க ரீதியான ஒற்றுமையை நிலைநிறுத்திய ஏ.ஈ.குணசிங்கா அவர்களோ,

> ''இந்நாட்டுப் பிரஜைகளான, இந்நாட்டின் நூறாயிரக்கணக்கான தொழிலாளர்களின் நலன்களும் பாதுகாக்கப்பட வேண்டுமாயின், நான் இனவாதியாக இருக்க வேண்டியவனாகிறேன். உண்மையாக இனவாதியாக இருக்கிறேன். தொடர்ந்தும் இனவாதியாக இருப்பேன்''

என்றார்.

நாட்டின் ஒருபகுதி உழைக்கும் வர்க்கத்தினரது அடிப்படை உரிமைகளை மறுக்கும் இச்சட்டங்களைக் கடுமையாக எதிர்த்த லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்கள் தமது உள்ளக்கிடக்கைகளை நீதியான முறையில் எடுத்துக் கூறினார்.

> ''இவ்வகையான இனவாதம் ஹஸ்டன் சம்பர்லேன், அடல்வ் ஹிட்லர் போன்றோரின் இனவாதமாகவே முடியும். ஓர் அரசியல்வாதி, நாட்டுத்தலைவர் என்று தன்னைக் கூறும் ஒருவர் இத்தகைய சட்டத்துக்கு ஆதரவளிக்கும்படி எம்மைக் கேட்பார் என நான் நினைக்கவில்லை. கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட உலகிலிருந்து வேறான ஒரு தனிச்சாதியாக எம்மைக் கற்பனை செய்து இதனை அனுமதிக்க முடியாது. நாம் மட்டுமே இந்நாட்டின் பிரஜைகளாக இருக்கும் பேறு பெற்றவர்கள் என்பது தவறு''

என்.எம்.பெரேராவின் இக்கூற்றானது அக்கால இடதுசாரி அரசியல்வாதிகளின் அரசியல் நிலைப்பாட்டினையும் பரந்த மனப்பான்மையினையும் தெளிவாக்குகின்றதெனலாம். 1948, 1949 பிரஜாவுரிமைச் சட்டங்களை எதிர்க்குமுகமாக இப் பிரஜாவுரிமைக்கு எவரையும் விண்ணப்பிக்க வேண்டாமென இலங்கை-இந்திய காங்கிரஸ் கேட்டுக்கொண்டது. விண்ணப்பித்தோரின் விண்ணப்பங்களை, குடியுரிமைப் பதிவு ஆணையாளர் பல தடவைகளில் தவறான முறையிற் பொருள்கொண்டு நிராகரித்துள்ளாரென உயர்நீதிமன்றம் தீர்ப்பும் வழங்கியிருந்தது. ஆனால் அரசோ, உயர்நீதிமன்ற நீதிக்கட்டளைகள் 1949 இலிருந்தே செயற்படா வண்ணம் 1952ஆம் ஆண்டின் 45ஆம் இலக்கச் சட்டத்தை நிறைவேற்றி அதனை உதாசீனம் செய்தது. மனிதாபிமானமற்ற இச்சட்டங்களின் பயனாக சில ஆயிரக்கணக்கானவர்களே வாக்குரிமையையும், குடியுரிமையையும் பெற்றனர். சுமார் 10 இலட்சம் இந்தியச் தோட்டத் தொழிலாளர்கள் தமது குடியுரிமையைப் பறிகொடுத்தனர். இதனால் இருபதுக்கும் மேற்பட்ட தொகுதிகளுக்கான தமது வாக்குரிமைப் பலத்தையும் இழக்கலாயினர். 1977இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நுவரெலியா-மஸ்கெலியா தேர்தற்றொகுதியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌ.தொண்டமான் மூன்றாவது அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்படும் வரையில், அதாவது 30 ஆண்டுகளாக இந்தியத் தமிழ் மக்கள் தங்கள் சார்பில் பாராளுமன்றத்துக்கு பிரதிநிதிகளைத் தெரிந்தனுப்பும் வாய்ப்பின்றியே வாழாவிருந்தனர். அத்துடன் சமூகப் பயன்பாடுகளில் மிக்க தொல்லைகளையும் அனுபவித்தனர். 'நாடற்றவர்' என நாமம் குட்டப்பட்டனர். புறக்கணிக்கப்பட்டதோர் சமூகமாக ஒதுக்கப்பட்டனர் என்று கூடச் சொல்லலாம். இந்தத் துரதிஷ்டம் பிடித்த மகளது உழைப்பினை உறுஞ்சிக் கொண்டு அவர்களை உரிமையற்றோராக்கினர் பேரினவாத அரசியல்வாதிகள்.

(தொடரும்)

---

அதிபர், ஆசிரியர்கள்

# தென்மராட்சி கல்வி வலயத்துக்கு பாடசாலை நேரத்தில் செல்லத்தடை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயத்தில் இருக்கின்ற பாடசாலை அதிபர்களோ அன்றி ஆசிரியர்களோ எக்காரணம் கொண்டும் பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் வலயக்கல்வி அலுவலகத்திற்கு வருகை தரக்கூடாதென கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கடும் உத்தரவினைப் பிறப்பித்துள்ளார்.

பாடசாலை நேரங்களில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலைகளை விட்டு அலுவல்கள் காரணமாக வெளியேறுவதால் பாடசாலை மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகினறது.

இதேவேளை, கல்விட் பணிப்பாளர் பாடசாலைகளுக்கு திடீர் விஜயங்களை மேற்கொண்டு அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின சேவையையும் இருப்பையும் மேற்பார்வை செய்து வருவதாகவும் அறியப்படுகின்றது. (அ-16)

# அரச நிறுவனங்களில் ஊழல் மோசடி: விசாரிக்க 16 அதிகாரிகள் நியமனம்

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் இடம்பெற்றிருக்கும் ஊழல் மோசடிகள் குறித்து விசாரணைகள் நடத்த ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் 16 அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாகாண சபைகள், அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களின் ஊழல் மோசடிகள் தொடர்பில் கிடைக்கப்பெற்றிருக்கும் 500க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் சம்பந்தமாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளது.

இது சம்பந்தமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் எம்.எம்.விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிப்பதில் நடந்துள்ள முறைகேடுகள் தொடர்பாக மட்டுமன்றி அரச நிறுவனங்களின் ஊழல் மோசடிகள் குறித்தும் தமது பிரிவு விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாக பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கென ஜனாதிபதி விசாரணைப் பிரிவு 16 அதிகாரிகளை நியமித்துள்ளது. (ற-4)

# யாழ்ப்பாணம் வரவேற்கிறது நுழைவாயில் வளைவு திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செம்மணியில் யாழ்ப்பாணம் மாநகரசபையினால் புனரமைக்கப்பட்ட "யாழ்ப்பாணம் வரவேற்கின்றது" எனும் நுழைவாயில் வளைவு நேற்று முன்தினம் மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசாவினால் சம்பிரதாயபூர்வமாக நாடாவெட்டித் திறந்து வைக்கப்பட்டது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின் போது இந்த நுழைவாயில் வளைவு பலத்த சேதத்துக்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

நேற்றையதினம் திறப்புவிழா வைபவத்தின்போது யாழ்.மாநகர சபையின் பொறியியலாளர் எஸ்.சிவப்பிரகாசம், சபையின் செயலாளர் திருமதி வசந்தகுமார் உட்பட சபையின் உயர் அதிகாரிகளும் பங்குகொண்டிருந்தனர். (அ-16)

# மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள சிறைகளில் 1000 இலங்கையர்!

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் சிறைச்சாலைகளிலுள்ள இலங்கையர்கள் தொடர்பான விபரங்களைத் திரட்டும் பணிகளை வெளிவிவகார அமைச்சு ஆரம்பித்துள்ளது.

வெளிநாடுகளில் சிறைச்சாலைகளில் எத்தனை இலங்கையர்கள் இருக்கின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கமென்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

இதுவரை கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் சுமார் ஆயிரம் இலங்கையர்கள் மத்திய கிழக்கு நாடுகளின் சிறைச்சாலைகளிலுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்தக் கணக்கெடுப்பின பின்னர் சிறைச்சாலைகளிலுள்ள இலங்கைக் கைதிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்துக் கவனம் செலுத்தப்படவேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்தியகிழக்கு நாடுகளில் 10 இலட்சத்திற்கும் அதிகமான இலங்கையர்கள் தொழில் புரிந்து வருவதாக வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ற-9)

# புனரமைக்கப்படாத வீதியால் பொதுமக்கள் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இருக்கின்ற பல பிரதான வீதிகளும், ஒழுங்கைகளும் மிக நீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் இருப்பதால் அவற்றில் பயணிக்கும் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக வேம்பிராய் சந்தியில் இருந்து வரணிக்குச் செல்கின்ற பிரதானவீதி பல வருடங்களாகத் திருத்த வேலைகளுக்கு உட்படுத்தப்படாமல் இருந்து வருவதால் அவ்வீதி குன்றும் குழியுமாக இருக்கின்றது.

இவ்வீதியையும் ஏனைய கிராமிய ஒழுங்கைகளையும் புனரமைப்புச்செய்து தரும்படி பாராளுமன்ற உறுப்பினர்களிடமும், அரச அதிகாரிகளிடமும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்த போதிலும்கூட,எத்தகைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என கிராமிய பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.(அ-16)

# நரியிடம் கோழியைக் கொடுப்பது போன்றதானது புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவது

## ஜே.வி.பி. அறிக்கை

(கொழும்பு)

"சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களைக் கொண்டு தமது படைத்தளங்களை மீளமைத்து வருகின்ற விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால் நரியிடம் கோழியைக் கொடுத்த கதையாகிவிடும்" என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

பொதுக்கட்டமைப்புக் குறித்து நேற்றுமுன்தினம் அறிக்கை ஒன்றினை ஜே.வி.பி.வெளியிட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வட-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நலன்புரி முகாம்களில் வாழ்கின்றபோது, அகதிகளுக்கு வழங்கப்பட்ட தகரங்களைக் கொண்டு புலிகள் தமது படைத்தளங்களின் முன்னரங்கங்களை அமைத்து வருகின்றனர்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களைக் கொண்டு "பங்கர்" அமைத்து வருகின்ற விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதா?

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்குப் பிரதேசத்திற்கு இலங்கை அரசாங்கத்தின் உதவிப்பொருட்கள் கிடைக்கவில்லை என்று நாடகமாடி சர்வதேச சமூகத்தினிடம் நடித்து கூடுதலான நிதியுதவிகளைப் பெற்று புலிகள் இராணுவ ரீதியில் பலம்பெற்று வருகின்றார்களே தவிர சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி முகாம்களில் வாழ்கின்றவர்களுக்கு புலிகள் ஒன்றுமே செய்யவில்லை.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கென்று உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் விடுதலைப் புலிகளினால் சேர்க்கப்பட்ட கோடிக்கணக்கான நிதியுதவி பாதிக்கப்பட்ட மக்களுக்காக இன்னமும் பயன்படுத்தப்படவில்லை.

அதைவிடுத்து அரசாங்கம் தமிழ் பிரதேசங்களுக்கு நிதியுதவி வழங்கவில்லை என விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர். இது நியாயமாகும்

சுனாமியினால் பாதிக்கப்பட்ட வட-கிழக்கு மாகாணங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 11 கிராமசேவகர் பிரிவும், திருகோணமலை மாவட்டத்தில் 9 கிராமசேவகர் பிரிவும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 8 பிரிவும், அம்பாறையில் 3 பிரிவும், முல்லைத்தீவில் 15 பிரிவும், கிளிநொச்சியில் 3 பிரிவுமாக மொத்தம் 49 கிராமசேவகர் பிரிவுகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருக்கின்றன.

சுனாமி அனர்த்தத்தினால் முழு வட-கிழக்கு மாகாணத்திலும் 319 கிராமசேவகர் பிரிவுகளே சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் 270 கிராமசேவகர் பிரிவுகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இருக்கின்றன. இதில் 49 கிராமசேவகர் பிரிவுகள் மட்டுமே விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருக்கின்றன. இந்த கிராமசேவகர் பிரிவை அபிவிருத்தி மற்றும் புனரமைப்புச் செய்வதற்கு விடுதலைப் புலிகளுடன் பொதுக் கட்டமைப்பு செய்துகொள்ள வேண்டுமா?

சுனாமி அனர்த்தத்தைப் பயன்படுத்தி இராணுவ ரீதியில் பலம் பெற்று வருகின்ற விடுதலைப் புலிகளுடன் "பொதுக்கட்டமைப்பு" ஏற்படுத்தப்பட்டால் அது வட-கிழக்கு மாகாணத்திற்கு மட்டுமல்லாது நாட்டின் பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துவிடும்.

பொதுக்கட்டமைப்பின் மூலம் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களும், பாதிக்கப்பட்ட பிரதேசங்களும் வளர்ச்சியடைகின்றதோ இல்லையோ, புலிகள் இராணுவ ரீதியில் வளர்ச்சியடைவது மட்டும் உண்மை என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-4)

# தார் பரலுக்கு மூட்டப்பட்ட தீ வேலியைப் பதம்பார்த்தது

## கடைகள் தெய்வாதீனமாகத் தப்பின

(காரைநகர்)

காரைநகர் பிரதான வீதி செப்பனிடுவதற்காக தார் உருக்குவதற்கு ரயர்கள் மூலம் தீ மூட்டிய போது அருகில் இருந்த வேலியும் தீப்பற்றி, எரிந்துள்ளது.

எனினும், அருகில் இருந்த எரிபொருள் வைக்கப்பட்டிருந்த இரு கடைகள் தெய்வாதீனமாகக் காப்பாற்றப்பட்டன.

இச்சம்பவம் காரைநகர் வாரிவளவில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,



காரைநகர் மேற்கு வீதி இவ்வருடம் புனரமைக்கப்பட்டு இரண்டாம் கட்டமாக தார் ஊற்றிப் புனரமைக்கப்பட்டது.

இதற்காக வீதியோரங்களில் மணல் அகழ்ந்து தார் பரலிற்கு தீ மூட்டப்பட்ட போது அருகில் இருந்த வேலியில் தீ பட்டு வேலி தீப்பற்றி எரிந்தது.

வேலி எரிவதைக் கண்ட அயலவர்களும், கடைக்காரர்களும் உடனடியாக தீயை அணைத்தனர்.

இது இவ்வாறிருக்க தார் உருக்குவதற்கு பழைய ரயர்கள் எரிக்கப்படுவதை நிறுத்துமாறு காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட போதும் ரயர் போட்டு எரிக்கப்பட்டுவருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ற-246)




# மாணவர் எழுச்சி நிகழ்விலிருந்து...








படங்கள்:-ஞா.ஐங்கரன்




# சுகபோக வாழ்வு வாழ்வதற்காக நான் பாராளுமன்றம் செல்லவில்லை

## வன்னி பா.உ.சதாசிவம் கனகரத்தினம் செவ்வி

"கடந்த 17 வருடகாலமாக முல்லைத்தீவு மாவட்டம் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இல்லாமலும் மக்கள் தங்கள் தேவைகளை, வெளியுலகுக்கு தெரிவிக்க முடியாமலும் இருள்மயமான ஒரு சூழ்நிலையிலேயே இருந்தார்கள். அண்மை



யில் நடைபெற்ற பாராளுமன்ற பொது தேர்தலின்போது மக்கள் தமிழ்த்தேசியத்தை வலி யுறுத்தி என்னை பாராளுமன்றம் அனுப்பி வைத்தார்கள். மக்கள் பட்ட சந்தோசம் சுனாமிப் பேரலையால, சிதறடிக்கப்பட்டது. முல்லை மாவட்ட மக்கள் பட்ட கஷ்டங்களையும் அவர்கள் நீரிலே துடிதுடித்து இறந்த காட்சிகளையும் மீட்புப் பணியின் போது நான் நேரடியாகக கண்டு கண்ணீர் வடித்தேன்.

வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரட்ணம் எமது முல்லைத்தீவுச் செய்தியாளருக்கு வழங்கிய விசேட செவ்வியின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச் செவ்வியின்போது கேட்கப்பட்ட கேள்விகளும் கொடுக்கப்பட்ட பதில்களும் வருமாறு:

**கேள்வி:-** சுனாமிப் பேரழிவின் பின் முல்லைத்தீவின் நிலை என்ன?

**பதில்:-** இப் பேரழிவின் பின் முல்லைத்தீவு நகரம் சுக்குநூறாகி விட்டது. மூவாயிரத்திற்கும் மேற்பட்டோா இறந்து விட்டார்கள். பதின் எட்டு கிராம சேவையாளர்கள் பிரிவில் 25,557பேர் அகதிகளாக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். 14 பாடசாலைகள் பாதிக்கப்பட்டும் முற்றாகச் சேதமடைந்துமுள்ளன. 30 ஆலயங்கள் சேதமடைந்துள்ளன.

**கேள்வி:-** மக்களின் வாழ்க்கைத்தரம் இப்போது எப்படி உள்ளது?

**பதில்:-** அவர்கள் இன்னும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவில்லை. அவர்களுக்கான உதவிகளை, தொழில் உபகரணங்களை, அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலம் படிப்படியாகச் செய்து வருகின்றோம். அவர்களுக்கான நிரந்தர வீடுகளை அமைக்கும் பொறுப்புக்களையும் அரச சார்பற்ற அமைபபுக்களே பொறுப் பேற்றுள்ளன. அரசாங்கத்தால் நிவாரண முத்திரைகளும் இறந் தவர்களுக்கான இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்பட்டு வருகினறது. சேதமடைந்த பாடசாலைகளைத் திரும்பக் கட்டுவதற்கு நோர்வேக்கான அகதிகள் நிறுவனம் முன்வந்துள்ளது.

**கேளவி:-** நீங்கள் வன்னி பாராளுமன்ற உறுபபினர்களில் ஒருவராக இருக்கின்ற போதிலும் முல்லைத்தீவு மாவட்டமான இராணுவக் கட்டுப் பாடற்ற பிரதேசத்தையே பிரதி நிதித்துவப் படுத்துகின்றீர்கள் அல்வா? அப்படியானால் உங்கள் மாவட்டத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளலாமா?

**பதில்:-** இம்மாவட்டமானது 1977ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒரு புதிய மாவட்டமாகும். அதாவது மூன்று நிர்வாக மாவட்டங்களான வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகியவைகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டு உருவாக்கப்பட்டதே இம் மாவட்டம். இது 1100 சதுர மைலில்நிலப்பரப்

தேச மாகும். குறிப்பாக இலங்கையில் உள்ள தொகுதிகளில் உள்ள மிகக் கூடிய நிலப்பரப்பை கொண்டதும் இம் மாவட்டமே. கரைத்துறைப் பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டு சுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளைக் கொண்டதாகும். அது மட்டுமல்லாது வட மாகாணத்தில் மூன்றாவது பாரிய நீர்ப்பாசனத்திட்டமான வவுனிக்குளத்திட்டம் இம் மாவட்டத்திலேயுள்ளது. இரணைமடு, கட்டுக்கரைத் திட்டங்களுக்கு அடுத்திருப்பது இத்திட்டமே. இத் திட்டத்தின் மூலம் இம் மாவட்டம் பெருமையடைகின்றது.

**கேள்வி:-** அப்படியானால் முல்லைமாவட்டம் உருவாகுவதற்கு முன் நிர்வாகம் எவ்வாறு நடைபெற்றது.

**பதில்:-** உண்மையில் இம் முல்லை மாவட்டம் உருவாகுவதற்கு முன் வவுனியா நிர்வாக மாவட்டத்துடனேயே இருந்தது. இன்னும் கொஞ்சம் விரிவாகச் சொல்வதானால் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இருந்து 1938ஆம் ஆண்டுவரை முல்லைத்தீவு ஒரு நிர்வாக மாவட்டமாகவே திகழ்ந்தது. 1938ஆம் ஆண்டு முல்லைத் தீவில் அமைந்துள்ள கச்சேரி வவுனியாவுக்கு மாற்றப்பட்டு முல்லைத்தீவு நிர்வாக அந்தஸ்தில்

> **2004ஆம் ஆண்டு முல்லைத்தீவு இராணுவ முகாம் அழிக்கப்பட்டு படிப்படியாக குடியேறத் தொடங்கி தங்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருந்த நேரத்திலேதான் சுனாமி என்னும் பேரரக்கன் எமது மக்களை எல்லாம் அழித்து அவர்களின் இயல்பு வாழ்க்கையை சீர் குலையச் செய்தான்.**

இருந்து மறைக்கப்பட்டது. அதன் பின்பே வவுனியா நிர்வாக மாவட்டம் உருவாக்கப்பட்டது. இதற்கு முன முல்லைத்தீவு-மன்னார் என்ற பெயருடைனையே ஒரு தேர்தல் தொகுதி இருந்தது. வவுனியா என்ற பெயர் இருக்கவில்லை. அதனால் முல்லைத்தீவு என்பது ஒரு புதிய மாவட்டம் அல்ல. ஏற்கனவே இருந்த ஒன்றைத்தான் 1977ஆம் ஆண்டு உருவாக்கியுள்ளனர் என்பதை குறிப்பிடவிரும்புகிறேன்.

**கேள்வி:-** முல்லைத்தீவு மாவடடத்தின் அபிவிருத்திக்கு எவ்வாறான பங்களிப்பை உங்களால் செய்யமுடியும்?

**பதில்:-** முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லை நகரம் 1990ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைகள் காரணமாக முற்று முழுதாகச் சீரழிக்கப்பட்டது. அனைத்து வளங்களும் நாசமாக்கப்பட்டன. மக்கள் ஏதிலிகளாக இடம் பெயர்ந்தனர். 2004ஆம் ஆண்டு முல்லைத்தீவு இராணுவமுகாம் அழிக்கப்பட்ட பின்னரே மக்கள் இங்கு படிப்படியாக குடியேறத் தொடங்கினார்கள். முல்லைத்தீவில் உள்ள அரச செயலகங்களும் படிப்படியாக இயங்க ஆரம்பித்து மக்களும் தங்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருந்த நேரத்திலேதான் சுனாமி என்னும் பேரரக்கன் எமது மக்களை எல்லாம் அழித்து அவர்களின் இயல்பு வாழ்க்கையை சீர்குலையச் செய்தான். அவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டி எழுப்புவது எமது தலையாய கடமை. அதனால் தான் அரசாங்கத்தின் நிதியை நம்பியிர்ாமல் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாகவும் வெளிநாடுகளின் நிதியுதவிகள் மூலமாகவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஊடாக மக்களின் இயல்பு வாழ்க்கைக்காகப் பாடுபட்டு வருகின்றேன். அம் மக்களின் கணணீர்

**கேள்வி:-** முல்லைத்தீவு மாவட்டம் முழுக்க முழுக்க விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருப்பதால் அங்கே உங்கள் செயற்பாடுகள் எப்படி?

**பதில்:-** முல்லைத்தீவு மாவட்டம் உண்மையில் முழுக்க முழுக்க விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமே எங்களது திட்டங்கள் செயற்பாடுகள் அனைத்திற்கும் அவர்கள் பூரண ஆதரவு வழங்குகின்றார்கள். மக்களின் இயல்பு வாழ்க்கைக்காக அபிவிருத்தித் திட்டங்களை எல்லாம் மிகத் திறமையாக செயற்படுத்தி வருகின்றனர். இங்கே புலிகள் தங்கள் நிர்வாகக் கட்டமைப்பு மூலமாக சகல திட்டங்களையும் செயற்படுத்தி வருகின்றார்கள். அது மட்டுமல்ல இங்கே ஊழல், நிதி மோசடி இலஞ்சம் என்ற பேச்சுக்கே இம்மியளவும் இடமில்லை இதனால் மன நிறைவுடன் செயலாற்ற முடிகிறது.

**கேள்வி:-** முல்லை மாவட்டம் அபிவிருத்தியில் புறக்கணிக்கபட்டு வருவதாக ஒரு அபிப்பிராயம் நிலவுகின்றது இது உண்மையா?

**பதில்:-** இது முற்றிலும் உண்மைக்கு மாறான ஒரு கதை இங்கே எவ்வளவோ, அபிவிருத்தித்திட்டங்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாகச் செயல்படுத்தி வருகின்றோம்.

**கேள்வி:-** இராணுவ நடவடிக்கைகள் காரணமாக முல்லை மாவட்டம் மிகவும் சீரழிந்த நிலையில் இருந்ததாகக் கூறுகின்றீர்களே அப்படியானால் இன்றைய நிலை என்ன?

**பதில்:-** இம் மாவட்டம் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பாதிக்கப்படட பிரதேசம் மாத்திரமல்ல. மிகப் பின்தங்கிய ஒரு பிரதேச மாகும். இதனைப் படிப்படியாக அபிவிருத்தி செய்ய வேண்டும். பாதைகள், கட்டடங்கள், மின்சார வசதிகள், பாடசாலைகள் என்பவற்றை மறுசீரமைக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றேன்.

இவை தொடர்பாக வேண்டிய நேரங்களில் வேண்டிய உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வருகின்றேன். குறிப்பாக எனது மாவட்ட அரசாங்க அதிபர் முதல் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் வரை சகலரும் எப்போதும் எனக்கு உதவியாகவே யுள்ளார்கள்.

**கேள்வி-** உங்கள் மாவட்டம் ஒரு பின்தங்கிய பிரதேசமாகும். அங்கு கல்வி நிலை எவ்வாறு இருக்கின்றது?

**பதில்:-** கல்வியைப் பொருத்தளவில் இது ஓர் பரந்த பிரதேசமாதலால் இரு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு கல்வி நிர்வாகம் பரவலாக்கப்பட்டுள்ளது. துணுக்காய் வலயம், 52 பாடசாலைகளையும் கரைதுறைப் பற்றுவலயம் 53 பாடசாலைகளையும் கொண்டதாக இயங்கிவருகின்றது. உண்மையில் ஏனைய மாவட்ட மாணவர்களுடன் ஒப்பிடும்போது எமது மாணவர்கள் அடிப்படை வசதிகளற்ற நிலையிலேயே கல்வி கற்று வருகின்றார்கள். உயர் வகுப்பிலே விஞ்ஞான பாடத்தைக் கற்கவேண்டிய மாணவர்கள் வெளி மாவட்டத்துக்குச் சென்று கல்வி கற்கவேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கும் தள்ளப்

பதற்கு ஆசிரியர்கள் ஒரு சிலரே இருப்பதால் ஆங்கிலக் கல்வியின் தரம் மிக மோசமாகவே உள்ளது. இருந்தும் எமது மாணவர்கள் தங்கள் திறமையினாலும் விடா முயற்சியினாலும் கல்வி கற்று பல்கலைக்கழகம் செல்வது பாராட்டக்கூடியதொன்று.

**கேள்வி:-** தங்கள் மாவட்டத்தில் வைத்திய சேவைகள் எவ்

> **முவாயிரத்திற்கும் மேற்பட்டோர் இறந்து விட்டாகள. பதினெட்டு கிராம சேவையாளர்கள் பிரிவில் 25,557 பேர் அகதிகளாக்கப்பட்டு இடைத் தங்கல் முகாம்களில் தங்கவைக் கப்பட்டுள்ளார்கள்.**

வாறு இருக்கின்றது?

**பதில்:-** வைத்திய சேவைகளைப் . பொறுத்தளவில் வைத்தியர்கள் பாற்றாக்குறை என்று சொல்வதைவிட வைத்தியர்கள் இல்லையென்றே சொல்லவேண்டும். இளைப்பாறிய உதவி வைத்திய அதிகாரிகளே மீள் நியமன சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். மருத்துவ தாதிகள் மிகப் பற்றாக் குறையில் உள்ளதால் பிரசவ விடுதிகளை நிர்வகிக்க முடியாத நிலை எற்பட்டுள்ளது. 7,8 வருடங்களாக மருத்துவப் பணிப்

பெண்களாக இங்கே வேலைசெய்பவர்களுக்கு இன்றுவரை நிரந்தர நியமனங்கள் வழங்கப்படாததால் அவர்கள் தொடர்ந்தும் தொண்டர்களாகவே கடமையாற்றி வருகின்றார்கள். ஒவ்வொரு வருடமும் குறைந்தது எமது மாவட்டத்திலிருந்து நான்கு மாணவர்களாவது பல்கலைககழ கத்தில் மருத்துவப் பட்டம்பெற்று வெளியேறுகின்றார்கள். ஆனால் இவர்கள் தமது சொந்த மாவட்டத்தில் கடமையாற்ற முன்வந்தால் இம் மாவட்டத்தில் வைத்தியர் பற்றாக்குறை எனற பேச்சுக்கே இடமில்லை. இது வேதனையானதொரு விடயம். இம் மாவட்டத்தின் வைத்தியர்களின் கட்டுப்பாட்டை நீக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வருகின்றேன்.

**கேள்வி:-** உங்களது மாவட்டம் எவ்வாறான தொழில் வளங்களைக்கொண்டுள்ளது. என்பதை விபரிப்பீர்களா?

**பதில்:-** எனது மாவட்டமானது ஒரு விவசாய மாவட்டமாகும். இங்கே நெல் உற்பத்தியுடன் உப உணவுப் பயிர்களும் செய்கை பண்ணப்படுகின்றன. முத்தையன் கட்டு, விசுவமடு திட்டங்களும் இப்பிரதேசத்திலேயேயுள்ளன. 1990 ஆம் ஆண்டுக்குப் பின் இராணுவ நடவடிக்கையால் இங்கே உள்ள பாரிய இயந்திரங்கள் சேதமாக்கப்பட்ட பின் மேட்டு நிலப்பயிர்ச் செய்கையைத் தவிர்த்து நெல் மட்டுமே வவுனிக்குளத் திட்டத்தில் செய்கை பண்ணப்படுகின்றது. அத்துடன் நன்னீர் மீன்பிடித் திட்டங்களும் ஆழ்கடல் மீன்பிடிப்பும் தெங்குப் பயிர்ச்செய்கையும் இம் மாவட்டத்தில் உள்ளன. மர முந்திரிகைச் செய்கைக்கென கடந்த காலங்களில் காணிகள் வழங்கப்பட்ட போதிலும் அவை நல்ல முறையில் பராமரிக்கப்படாமையினால் அத்திட்டத்தின் மூலம்

விட்டாலும் கணிசமான அளவிலே பயன்கிடைத்து வருகின்றது. அத்துடன இங்கு பனை வளம் நிறைந்த ஒரு பிரதேசமாக இருந்தாலும் இத் தொழிலில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. அரசாங்கமும் ஊக்கமளித்து இத் தொழிலை அபிவிருத்தி செய்யாது புறக்கணித்து விடடது. இப் பிரதேசத்திலே சுமார் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட பனை மரங்கள் உள்ளன. இருநதும் அத் தொகையினை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

**கேள்வி:-** முல்லை மாவட்டத்தில் உள்ள அரசாங்க ஊழியர்கள் பலதரப்பட்ட பிரச்சினை களின் மத்தியில் கடமையாற்றி வருவதாக அறியப்படுகின்றதே. அதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** ஆம் உண்மையில் எமது மாவட்டத்தில் உள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் படும் கஷ்டங்களை நான் நன்கு அறிவேன. வெளிமாவட்டத்தில் இருந்து இங்கு கடமையாற்றவரும் உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக 10 வருடங்களுக்குமேல் கடமையாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். இடம் மாற்றக்கோரி விண்ணப்பித்தாலும் அது கிடைப்பதில்லை. கிடைத்தாலும் புதியவர்கள் வர மறுக்கினறார்கள். காரணம் இங்கே அவர்களுக்கான இருப்பிட வசதிகள் இல்லை. குறிப்பாக எனது மாவட்டத்தில் மிகப் பின்தங்கிய பிரதேசங்கள் மாந்தை கிழக்கும் துணுக்காய்ப் பிரதேசமுமாகும் இப் பிரதேசங்களில் கடமையாற்றி வரும் அரச ஊழியர்கள் தொடர்ச்சியாக 10 வருடங்களுக்கு மேல் கடமை யாற்றியும் இடமாற்றங்கள் கிடைக் காததால் மனச்சோர்வுடனேயே கடமையாறறுகின்றார்கள். மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தில் உரிய ஆளணி நிரப்பப் படாததால் சிலர் மட்டுமே கடமை யாற்றுகின்றார்கள். காரணம் இங்கே வர எவரும் முன்வருவதில்லை. ஒரு அரசாங்க ஊழியர் 5 வருடத்திற்கு மேல் ஒரு இடத்தில் கடமையாற்ற முடியாது என்பது பொதுவான நடைமுறை ஆனால் முல்லைத்தீவு மாவட்டம் இதற்கு விதிவிலக்கா என கேட்கவிரும்புகின்றேன். குறிப்பாக மாந்தை கிழக்குப் பிரதேசத்தைக் குறிப்பிடலாம்.

**கேள்வி:-** இறுதியாக தாங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்?

**பதில்:-** நாம் கடந்தகால பாராளுமன்ற உறுப்பினர்களைப் போல் கதிரைகளை அலங்கரிப்பதற்காகவும் சுகபோக வாழ்வு வாழ்வதற்காகவும் பாராளுமன்றம் செல்லவில்லை. தமிழ்த் தேசியம் தமிழீழத் தாயகம் என்ற கோட்பாடே எமது இலட்சியமாக வலியுறுத்தி சர்வதேச ரீதியிலான ஆதரவைப் பெறவே மக்கள் என்னை பாராளுமன்றம் அனுப்பியுள்ளார்கள் என்பதை வலியுறுத்தி விடைபெறு

**செவ்வி கண்டவர்:**
**வலம்புரி முல்லைச் செய்தியாளர்**
**மயில்வாகனம்-இந்திரநாதன்**


# டென்ஷன் – மன அழுத்தம்

**வேலை** முடிந்து வீட்டுக்கு வருகிறோமோ இல்லையோ, களைப்பும் அலுப்பும் சேர்த்து இப்படிப் பாடாய்ப்படுத்துக்றது. இதனால், தலைவலி வேறு... ஐயோ...''

இது மனப்பாடம் ஆகாத பல பேருடைய வசனம். அதிக வேலைப்பளு, வேல்லயிடத்தில் அதிக நேரத்தைச் செலவிடுதல் ஆகியவற்றால் தலைவலி, மன அழுத்தம், மைக்ரேன் ஆகியவை வந்து தொந்தரவு கொடுப்பது சகஜம் தானே. ஆதலால், இவை நம்மைத் தாக்கும்போது இன்னும் அதிக டென்ஷன் ஆகாமல், அவற்றைச் சமாளித்து நமது பிற வேலைகளில் தொடர்ந்து ஈடுபட வழிகாண வேண்டும். செலவில்லாமல் சுலபமான சில 'டிப்ஸ்களை' நீங்கள் பின்பற்றினால், இது சாத்தியமாகும்.

◆உங்கள் கட்டை விரலால் ஆள்காட்டி விரலின் நுனியை மெதுவாகத் தொடவும்.

◆ஒரு நிமிடம் கண்மூடி, இரண்டு கைகளிலும் உள்ள விரலின் நுனிகளையும் ஒன்றோடொன்று தொடவும். ஒவ்வொரு விரல் நுனிகளும் மூளையோடு தொடர்புடையவையாகும். இதைப் பல தடவை செய்தால், உங்கள் டென்ஷன் குறைந்து ...ற்று மன அமைதி காண்பீர். இந்த வழி முறையை GYANA MUDRA என்று கூறுவர்.



◆அது தவிர்த்து, தலைவலியும் அழுத்தமும் குறைய ஒரு குவளை காப்பி அல்லது தேநீர் கூட உதவும். இருப்பினும், அதிகளவு காப்பியும் தேநீரும் உடலுக்கு வேறு உபாதைகளை விளைவிக்கக்கூடும். நொறுக்குத் தீனிகள், தின்பண்டங்கள் ஆகியவற்றால் டென்ஷனைக் குறைக்க முயலாதீர்கள்; அது ஒருபோதும் உதவாது.

**டென்ஷன் - மன அழுத்தம்**

நம் உடலுக்கும் மனதிற்கும் ஏறபடும பல்வேறு மாற்றங்களுக்கேற்ப நமக்கு டென்ஷன் மற்றும் மன அழுத்தம் ஏற்படும். டென்ஷன் நமக்குத் தீய விளைவுகளை மட்டுமல்ல; நல்ல விளைவுகளையும் ஏற்படுத்துகின்றது. ஆம்...! சில வேளைகளில், படபடப்பும் டென்ஷனும் நம்மைக் குறிப்பிட்ட ஒரு வேலையைச் செய்யத் தூண்டும். இது தொடர்ந்து, நமக்குப் புதிய அனுபவத்தையும் ஊக்கத்தையும் உண்டாக்கும். அதிக டென்ஷன் நமக்கு ஆரோக்கியமற்ற உபாதைகளையும் ஏற்படுத்தக்கூடும். அதிக கோபம், மற்றவர்களால் வெறுக்கப்படுதல், ஒதுக்கப்படுதல, தனிமை... ஆகியவை ஏற்பட்டு இடைவிடாத தலைவலி, வயிற்றுக் கோளாறு, அல்சர், இரத்தக் கொதிப்பு, இன்சோம்னியா, இருதயக் கோளாறு, ஸ்ட்ரோக் போன்ற பிற நோய்களுக்கு நம்மை ஆளாக்கிவிடும்.

வாழ்க்கையில் ஏற்படுகின்ற பலவித மாற்றங்களினால் நமக்குப் படபடப்பும், டென்ஷனும் வருகின்றன. அன்புக்குரியவர் ஒருவரின் மரணம், குழந்தையின் பிறப்பு, வேலை மாற்றம், புதிய உறவு போன்ற பல்வேறு காரணங்களால், நாம் டென்ஷன் அடைகிறோம். இந்த மாற்றங்களை நாம் எவ்வாறு ஏற்றுக் கொள்கிறோமோ, டென்ஷனை நாம் எவ்வாறு பயன்படுத்திக்கொள்கிறோமோ, அதற்கேற்பதான் விளைவுகளும் அமையும.

**எப்படி படபடப்பை அல்லது டென்ஷனை நீக்குவது?**

முதலில் கூறியது போல, அளவான டென்ஷன் நம்மைச் செயலில் ஈடுபடுத்தும். ஒரு விஷயம் முடிவாகப் போகின்ற நாள், போட்டி முடிவுகளைத் தெரிந்து கொள்ளுமபோதும், எதிர்ப்புகள், ஏமாற்றங்கள், அதிக மனக்கவலைகள் ஆகியவற்றைச் சந்திக்கும்போது டென்ஷன் ஏற்படும். இவையாவும் ஏற்படும்போது நாம மேலும் பக்குவமடைவோம்; வாழ்க்கையின் நெளிவு சுளிவுகளை அறிந்துகொள்ளமுடியும். ஆதலால், டென்ஷனை நக்க முயல்வதைவிட, அவற்றை எப்படி சமாளிப்பது என யோசிக்க வேண்டும். நாம் செய்யவேண்டியதெல்லாம் என்னவென்றால், நமக்கு ஏற்படுகினற மன அழுத்தத்தின் அளவைக்கொண்டே குறிப்பிட்ட செயலில் இறங்கி வெற்றி காணவேண்டும்.

**மன அழுத்தத்தின் அளவை எப்படிக் கணக்கிடுவது?**

எல்லோருக்கும் ஒரே மாதிரியான அளவில் மன அழுத்தம் ஏற்படுவதில்லை. ஒருவருக்கு டென்ஷனை ஏற்படுத்தும் ஒரு விஷயம் மற்றவருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தலாம். வயது வித்தியாசமும் மன அழுத்த அளவை வேறுபடுத்தும். ஒரு இடத்தில் அமாந்து நிலையான வேலையைச செய்பவரிடம் மற்ற வேலையைக் கொடுத்து செய்யச் சொன்னால், அவருக்கு டென்ஷன் ஏறபடும். அதேபோல், வெளி வேலைகள் செய்பவரிடம் அலுவலகத்தில அமர்ந்து செய்யக்கூடிய வேலையைக் கொடுத்தால் அவருக்கும் டென்ஷன் ஏற்படும். நம்மால் ஒரு அளவிற்குள்தான் டென்ஷனைத் தாங்கிக்கொள்ளமுடியும். படபடப்பினாலுமே டென்ஷனினாலுமே பல நோய்கள் நமக்கு ஏற்படுகின்றன. இவ்வாறு நோய்களுக்கு ஆளாக நேரிட்டால், நம் டென்ஷன் அல்லது மன அழுத்தத்தின் அளவு எல்லை கடந்துவிட்டது என்றே அர்த்தம்.

மன அழுத்தம் ஏற்படுவதற்கு ஏராளமான காரணங்கள் இருப்பது போலவே அதைக் களைவதற்கும் ஏராளமான வழிகள் உள்ளன.

◆உங்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்ற விஷயம் என்ன? அதைக் கண்டுபிடித்து, அதை தவிர்க்கப் பார்க்காதீர்கள். உங்களது உடலும் மனமும் எவ்வாறு அவ்விஷயத்தால் பாதிக்கப்படுகிறது?

◆எதை உங்களால் மாற்ற முடியும்? உங்களுக்கு டென்ஷன் கொடுக்கின்ற விஷயத்தை முழுமையாகத் தவிர்க்க முடியுமா? அல்லது தினமும் அதை எதிர்கொள்ள முடியாவிட்டால், வாரத்திற்கு ஒருமுறை எதிர்கொள்ள பழகிக் கொள்ளுங்கள். அனைவரையும் திருப்திப்படுத்த வேண்டும் என்று எண்ணுகிறீர்களா? அது சுலபமான காரியமல்ல. வேலைப்பளு அதிகமாக இருந்தால் சற்றுநேரம் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்; அல்லது பணியிடத்தைவிட்டு சற்றுநேரம் விலகி விடுங்கள்.

◆உடனே டென்ஷனாகாமல், டென்ஷனைக் கட்டுப்படுத்த பழகிக்கொள்ளுங்கள். டென்ஷன உங்களைக் கட்டுப்படுத்த வைக்காதீகள. டென்ஷனை நீங்கள் கட்டுப்படுத்துங்கள்.

◆டென்ஷன் ஏற்படும்போதெல்லாம் மெதுவாக மூச்சை உள்ளிழுத்து விடுங்கள். வேகமாகிய உங்கள் இருதயதுடிப்பை இயல்பான நிலைக்கு அது கொண்டு வந்துவிடும். இது எதுவுமே சரிப்பட்டு வராவிட்டால், முறைப்படி யோகாசனப் பயிற்சியை மேற்கொள்ளுங்கள்.

◆இருதய வலுவிற்கும், சீரான இரத்த ஓட்டத்திற்கும் உடற்பயிற்சியே சிறந்தது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. மெது ஓட்டம், சைக்கிளோட்டுதல், நீச்சல் ஆகியவற்றை ஒரு வாரத்திற்கு 2 அல்லது 3 முறை செய்யலாம் சத்துணவை உட்கொண்டு உடல் எடையை அளவாக வைத்துக்கொள்ளலாம். அளவான தூக்கமும் மிக முக்கியம்.


◆நல்ல ஆரோக்கியமான நட்பு வட்டங்களை உருவாக்கிக்கொள்ளுங்கள். உங்களுக்கு தேவையான பிடித்த லட்சியங்களை நனவாக்க முனைந்து செயல்படுங்கள். இடையில் ஏற்படுகின்ற ஏமாற்றங்கள், கசபபுகள், கவலைகள் போன்றவற்றை தைரியமாக எதிர்கொள்ளுங்கள். உங்கள் வெற்றிக்கு அவையே உந்து சக்தியாக அமையட்டும்.

உங்களை நீங்களே நேசியுங்கள். தேவையற்ற குழப்பங்கள், டென்ஷனைத் தவிர்த்து நிம்மதியாக இருங்கள்.

## கறுப்பு ஆடை வெயிலை இழுக்கும்!

கறுப்பு நிற ஆடைகளை அணிந்து வெயிலில் நடந்தால், உடல் எரிகிறதா? வெப்பத்தை இழுக்கும் ஆற்றல் கருமை நிறத்துக்கு உண்டு. எனவே, வெயில் காலத்தில் கருமை அதிகம் கலக்காத ஆடைகளை அணிந்து செல்லுங்கள். வித்தியாசத்தைக் கண்டிப்பாய் உணர் வீர்கள்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-62



*அனுப்ப வேண்டிய முகவரி-*

**குறுக்கெழுத்துப் போட்டி இல ~ 62**
**'வலம்புரி - சங்குநாதம்'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

முழுப் பெயர் :- ..........................................
முகவரி :- ..........................................
..........................................
..........................................

இங்கே வெட்டுக ------------------------------ ✂

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 09ஆம் த்கதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

### இடமிருந்து வலம்

(1)தமிழ் நாட்டின் விடுதலைப் போருக்கு முதல் முழக்கமிட்டவன். (5)இயற்கை அனர்த்தங்களில் மிகவும் கொடூரமானது. (6)சங்க கால இலக்கியங்களில் திருப்பதியின் பெயர். (8)குற்றவாளிகளின் கையில் இதைத்தான் மாட்டுவார்கள்.

### மேலிருந்து கீழ்

(1)ஒரு பூண்டு. (2)ஒரு இசைக் கருவி (குழம்பி வருகிறது) (3)கம்பளி (குழம்பிவருகிறது). (4)பொன்கிடைத்தாலும் இது கிடைக்காது என்பார்கள் (கீ.மே). (6)புலி - இப்படியுமழைப்பர். (7)கிராமத்து பெண்கள் ஒன்றுகூடி பாடி ஆடுவது (குழம்பிவருகிறது).

### குறுக்கெழுத்துப் போட்டி இல.60 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1.சிந்துபைரவி 5.திரிபதி 6.மாசி 7.முகாரி 8.காது 10.கருங்கா.லி

**மேலிருந்து கீழ்**

1.சித்திரகாரர் 2.துரோபதி 3.ரவை 4.கஸ்தூரிமான் 6.காசி 7.முள்ளங்கி 9.புலி

### *பரிசு பெற்றோர் பெயர் விபரம்*

| | | |
|---|---|---|
| **முதற் பரிசு** | :- | R.அருந்ததி<br>கொட்டடி<br>யாழ்ப்பாணம். |
| **இரண்டாம் பரிசு** | :- | பா.விக்ரம்<br>கண்டி வீதி,<br>சாவகச்சேரி. |
| **மூன்றாம் பரிசு** | :- | திருமதி. S.பாக்கியநாதன்<br>பொது நூலகம்,<br>சங்கானை. |

**போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

உ.குருசங்கர், கொக்குவில். வே.குமாரசுவாமி, கரவெட்டி. கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. S.சுதர்சன், நாவலர் வீதி. லோ.சுவஸ்திகா, உடுப்பிட்டி. வி.இளங்கோ, கோப்பாய். து.நக்கீரன், மல்லாகம். க.காயத்திரி, கரவெட்டி. க.பிரதீபன், வல்வெட்டி. மா.விஜய், மிருசுவில். நா.சந்தியா, கைதடி. கே.விமல்ராஜ், கொட்டடி. ம.விதுஷன், யாழ்ப்பாணம். தெ.தனுசாந்தன், நாவற்குழி. S.பௌசிகா, புங்குடுதீவு. L.அபிராமி, வல்வெட்டி. ம.ஜனா, இணுவில். இ.வினோ, சுன்னாகம். திவ்வியசசி, சித்தன்கேணி. சொ.நித்தியா, கொக்குவில். ஞா.சுகிர்தா, சாவகச்சேரி. பா.வரன், வரணி. தி.அனுஷன, மானிப்பாய். வ.நிலோஜன், நாவாந்துறை. லோ.கீர்த்திகா, யாழ்ப்பாணம். R.ராஜன், வடமராட்சி. N.நிகா, இணுவில்.

# பார்வையற்றோருக்கு இயந்திரத் தடி

இருள் சூழ்ந்த உலகத்தை மட்டுமே அறிந்த பார்வையற்றோர் மரம், செடி, கொடி, வானம், நிலம், கடல், பறவைகள், மலர்கள் நிறங்கள் என எதையுமே பார்க்க முடியாது என்பது பெரிய சோகம்.


நம்மால் பார்வையைக் கொடுக்க முடியாது. ஆனால் அவர்களுக்கு உபயோகப்படுகிற மாதிரி ஏதாவது செய்யலாமே எனத் தோன்றியது சென்னை சாய்ராம் இன்ஜினியரிங் கல்லூரியில் கம்யுட்டர் சயன்ஸ் படிக்கும் மாணவர் சிலருக்கு. ஒருவருட உழைப்பின் பயனாக இந்த இயந்திரத் தடியை உருவாக்கியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள் அக்கல்லூரி மாணவர்களான அரவிந்தாக்ஷனும் பரத்தும்.

இவர்கள் உருவாக்கியிருக்கும் 'இன்டெலிஜன்ட் கேன்' (ஐ.கேன்) என்ற இயந்திரத்தடி பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

ஐ.கேன் தடியின் அடியில் ஒரு சின்னச் சக்கரமும் அதனுள் மோட்டாரும் சென்ஸாரும் கம்பியுட்டர் சிம்களும் பொருத்தப்பட்டுள்ளன. பார்வையற்றோர் அதைக் கையிலெடுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தால் சென்ஸார் விழிப்படைந்து வழியில் கல், குழி, தடை, மேடு, பள்ளம், ஏதாவது இருந்தால் 'பீப்...பீப்...' என்று சப்தமிட்டு உஷார்படுத்துகின்றது. அதோடு தலையை உரசுகிற மாதிரி மேலிருந்து கேபிள் அறுந்து தொங்கினாலோ, இடிக்கும் அளவுக்கு கதவு, கட்டை ஏதாவது நீட்டிக்கொண்டிருந்தாலோ உடனே எச்சரிக்கிறது. பார்வையற்றோர் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் இந்த ஐ.கேனுக்கு உலக அங்கீகாரம் கிடைத்திருக்கிறது.

'இந்த இயந்திரத் தடி அதிகமாகத் தயாரிக்கப்பட்டு மிகக் குறைந்த விலைக்குக் கிடைக்க வேண்டும். அதனால் பார்வையற்றோர் அனைவரும் முழுமையாகப் பயனடைய வேண்டும். அதுதான் எங்களின் உண்மையான வெற்றி' என்கிறார்கள் இந்தச் சாதனை மாணவர்கள் இருவரும் ஒருமித்த குரலில்.

# பூண்டை சாப்பிடும் போது வீசும் சகிக்க முடியாத மணத்துக்குக் காரணம் என்ன?



பூண்டில் அலின் (Allin) என்று சொல்லப்படும் அமினோ அமிலம் உள்ளது. அத்துடன் பூண்டின் கலங்களில் அலினேசு (Allinase) எனப்படும் நொதியமும் காணப்படுகிறது.

வாயில் பூண்டை இட்டு மெல்லும் போது அலினேசு நொதியம் உயிரியல் ரீதியாகத் தொழிற்பாடு இல்லாமல் இருக்கும் அலின் அமினோ அமிலத்தை அலிசின் (Allicin) என்னும் இன்னுமொரு அமினோ, அமிலமாக மாற்றிவிடுகிறது.

இந்த அலிசின்தான் பூண்டுக்கே உரித்தான மணத்துக்குக் காரணம். ஆனால் பூண்டை உணவில் இட்டுச் சமைக்கும் போது, உயர் வெப்பம் நொதியத்தை அழித்துவிடுவதால் அலன் அமினோ அமிலம் -அலிசின் அமினோ அமிலமாக மாறுவதற்கான வாய்ப்பு இல்லாமற் போய் விடுகிறது. இதனால்தான் பச்சைப் பூண்டை வாயில் இட்டு மெல்லும் போது வரும் மணம் - பூண்டு போட்ட ரசத்தை ருசி பார்க்கும் போது வீசுவதில்லை.

இதெல்லாம் சரி வெங்காயத்தின் சகோதரியான இந்தப் பூண்டின் விஞ்ஞானப் பெயர் என்ன தெரியுமா? Allium sativum.

# எரிபொருளைச் சேமிக்கும் ஹைபரிட் கார்

எரிபொருளை சேமிப்பதற்கென புதிய வகை இயந்திரம் ஒன்றினை விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர். இந்தப் புதிய வகை இயந்திரத்துக்கு 'அல்ட்ரா கம்பியூட்டர்' என புதிய பெயர் வைக்கப்பட்டுள்ளது. எடையில் மிகவும் குறைவானதாக இந்தப் புதிய இயந்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையில் புதிய இயந்திரம் செயல்படுகிறது.

பொதுவாக, நான்கு சக்கர வாகனங்களில் இருந்து அதிக அளவில் கார்பன் டையாக்சைட்டு வெளியிடப்படுகிறது. இந்தப் புதியவகை இயந்திரம் பயன்படுத்தப்படும்போது 87 சதவீதம் கார்பன் டையாக்சைட்டு வெளியிடப்படுகிறது. எனவே, புதிய வகை இயந்திரத்தை அனைத்து நான்கு சக்கர வாகனங்களிலும் பொருத்தவேண்டும் என்ற கருத்து ஐரோப்பிய நாடுகளில் உருவாகி உள்ளது. இவ்வாறு பொருத்தினால் தான் சிக்கலான கார்பன் டையாக்சைட்டின் அளவு அதிகரித்தலுக்கு தீர்வு காணமுடியும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

ஆஸ்திரேலியாவில் பாரிஸ் பெனில் குயின்ஸ்லேண்ட் மியூசியத்தின் 100ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இந்தப் புதிய வகை அல்ட்ரா கம்ப்யூட்டர் ஹைப்பரிட் காரில் பொருத்தப்பட்டுள்ளது. இந்தப் புதிய வகை ஹைப்பரிட் கார் இன்னும் ஒரு ஆண்டில் வர்த்தக ரீதியாகப் பயன்படுத்தப்படும் எனத் தெரியவந்துள்ளது. இந்தப் புதிய வகை காரில் 2 எலக்ட்ரிக் மோட்டார்கள் சக்கரத்துக்கு அருகில் பொருத்தப்பட்டுள்ளன. இந்தக் எலக்ட்ரா'க் மோட்டாருடன் லித்தியம் அயன் பாட்டரி பொருத்தப்பட்டுள்ளது. இந்தப் புதிய வகை ஹைபரிட் கார் மணிக்கு 150 கி.மீ வேகத்தில் செல்கிறது. காரின் எடையும் மிகக் குறைவானதாக உள்ளது. அலுமினியம் கார்பன் பையரால் இந்த கார் உள்ளது.



இந்தப் புதிய வகை காரில் சூரிய ஒளியின் மூலமாக 'ரீசார்ஜ்' செய்யும் பட்டரியும் உள்ளது.

இனி எதிர்காலத்தில் அனைத்து நாடுகளின் சாலைகளிலும் 'அல்ட்ரா கம்ப்யூட்டர்' பொருத்தப்பட்ட கார்கள் வலம் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நமது உடலிலுள்ள எலும்புகளின் எண்ணிக்கை என்ன? ஆளாளுக்கு இந்த எண்ணிக்கை மாறுவது ஏன்?

பறக்கும் போது குழந்தைகளிடம் 350 எலும்புகள் வரையில் காணப்படுகின்றன. குழந்தை வளரவளர இந்த எலும்புகளில் பல இணையத் தொடங்குகின்றன. உதாரணத்துக்கு முதுகுத்தண்டு எலும்புகளில் கடைசி நான்கு எலும்புகளும் இணைந்து 'குயிலலகு' எனப்படும் ஒரே வால் எலும்பு (Tail bone) ஆகி விடுகிறது.

வளர்ச்சி முறறுப் பெறும் போது 206 எலும்புகளாகக் குறைந்து விடும். ஆனால் எல்லோரிடமும் 206 எலும்புகள் இருப்பதில்லை. பொதுவாக 12 சோடி மார்பு எலும்புகள் இருப்பதாகத்தான் சொல்லிக்கொள்கிறோம். ஆனால் நம்மில் 20 பேரில் ஒருவருக்கு இந்த மார்பு எலும்புகள் 13 ஜோடிகள் இருககின்றன. மங்கோலியர்களுக்கு இந்த எண்ணிக்கை 11 ஜோடிகளாம். இவற்றுக்கு அப்பால், ஆறு விரல்காரர்களுக்கு போனஸ் ஆகச் சில எலும்புகள் இதனால்தான் எலும்புகளின் எண்ணிக்கை மாறுபடுகின்றது.

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 63

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



'சின்னக்குயில்' என்று வர்ணிக்கப்படும் பிலபல பின்னணிப பாடகியான இவரை உங்களுகருகுத தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும 06ஆம் திகதிககு முனனா கிடைககக் கூடியதாக அனுபபி வைக்கவும். நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 63**
**வலம்புரி ~ சங்குநாதம**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம.**

**குறிப்பு:-**

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளாகளுககு குலுககலமுறை மூலம தெரிவுசெய்யபபட்டு பரிசு வழஙகப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணததினை 'வலம்புரி' காரியாலயததில் பெற்றுக் கொள்ளவும.

**இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:-63**


படத்தில் உள்ளவரின் பெயர் :-........................

அனுப்புபவரின் முழுப்பெயர் :-........................

அனுப்புபவரின் முகவரி :-........................
........................
........................

**இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 61 சரியான விடை**





நடிகர் ரஜனிகாந்

**இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 61இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

| | |
|---|---|
| முதற் பரிசு | :~சி.மஞ்சுளா, பொன்னாலை வீதி, சங்கானை. |
| இரணடாம் பரிசு | :~க.தயாநிதி, தபாற்கந்தோர் வீதி, காரைநகர், |
| மூன்றாம் பரிசு | :~T.தர்ஷினி, புலோலி மத்தி, வடலித்தோட்டம். தம்பசிட்டி. |

**சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்**

சி.கோபிகிருஷ்னன், யாழ்ப்பாணம். சி.சிறிகாந், மந்திகை, வே.சுபாஷினி, மானிப்பாய். கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. செ.நித்தியவாணி, கோப்பாய். சி.விவேக், வியாபாரிமூலை. சி.கார்த்திகாயினி, யாழ்ப்பாணம். வே.குமாரசாமி, கரவெட்டி. சி.சங்கீதா சம்பூரணி, வட்டுக்கோட்டை. திருமதி.பா. செல்வராணி, வட்டுக்கோட்டை. த.குமுதா, நீர்வேலி. வி.கவிந்தன், பருத்தித்துறை. அ.அனித்தா, வடலியூர். தி.ஜதுஸா, காரைநகர். மா.பாக்கியலட்சுமி, பருத்தித்துறை. ம.மயல்வாகனம், கரவெட்டி. ம.தரணி, கல்வியங்காடு. ச.மைதிலி, வடமராட்சி. ம.கயல்விழி, தாவடி. ச.காஞ்சனா, கொட்டடி. பா.பரஞ்சோதி, மானிப்பாய். ச.நிரோஜன், யாழ்ப்பாணம். வ.விதுஷன், யாழ்ப்பாணம். கா.கனஸ்ரா, தம்பசிட்டி. த.கல்பனா, சங்கானை. வ.சயிலதா, கந்தர்மடம். க.பரணி, பொ.திருச்செல்வம், மானிப்பாய். ம.கல்யாணி, மானிப்பாய். ச.சந்திரா, ஆனைக்கோட்டை. த.தர்சிகா, பருத்தித்துறை. க.தயாபாரன், பண்டத்தரிப்பு. க.மணிவாசகம், கோப்பாய். ச.மலர்விழி, மானிப்பாய். அ.சசி, ஆனைக்கோட்டை. ம.ஜனா, உடுவில், ற.உஷா, மானிப்பாய். தி.லூகிர்தன், சித்தன்கேணி. ச.கஜசங்கவி, இணுவில்.

## கொரியாவில் வேலைவாய்ப்பு; பணம் பறிக்கும் கும்பல் குறித்து விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்து!

(கொழும்பு)

கொரியாவில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறிக்கொண்டு சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுப் பணம் பறிக்கும் கும்பல் பற்றி அவதானமாக இருக்குமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இத்தகைய நபர்கள் குறித்த தகவல்களைத் தமக்கு அறியத் தருமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

குறித்த தகவல்களின் அடிப்படையில் இக் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் வேலை வாய்ப்பு முகவர்களாகவும் செயற்பட்டது விசாரணைகளிலிருந்து புலனாகியுள்ளது.

இந்த முறையில் தமக்குக் கிடைக்கும் முறைப்பாடுகளைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உதவியுடன் விசாரிக்கப்போவதாக வேலைவாய்ப்புப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது. (ற-9)

## கல்லுடைக்கும் ஆலைகளின் விபரங்கள் கோரப்பட்டுள்ளன

(மானிப்பாய்)

வலி - தென் மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியிலுள்ள கல்லுடைக்கும் ஆலைகளின் விபரங்களை யாழ்.பிராந்திய மத்திய சுற்றாடல் அதிகாரசபை பொறுப்பதிகாரி கோரியுள்ளார்.

இவ் விபரங்கள் மாவட்ட மட்டத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகள் ஊடாக வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் கல்லுடைக்கும் ஆலைகளின் விபரங்களை அனுப்பிவைக்குமாறு மத்திய சுற்றாடல் அதிகாரி விஜிதா சத்தியகுமார் கேட்டுள்ளார். (ற-150)

## நகல் சட்ட மூலம் தயாரிக்க மின்சார சபை புனரமைப்பு குழுவின் பணி ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையைப புனரமைப்பதற்கு வழிவகுக்கும் நகல சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கென நியமிக்கப்பட்ட குழு அதன் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

அடுத்த மாதம் 5ஆம் திகதி முதல் தினமும் முற்பகல் 10.00 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை இந்தக் குழுவினர் ஆலோசனையை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

12 அங்கத்தவர்கொண்ட இநதக் குழுவில் தொழிற்சங்கப பிரதிநிதிகளும் இடம்பெற்றிருப்பது முக்கிய அம்சமாகும்.

இந்த நகல் சட்டமூலம் அடுத்த மாதம் 10 ஆம திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ற - 9)

## கொத்தணி பஸ் கம்பனி ஊழியர்களின் முறைகேடுகளை ஆராய நடவடிக்கை

(கொழும்பு)

கொத்தணி பஸ் கம்பனியைச் சேர்ந்த சில அதிகாரிகள் தமது கடமைகளை உரிய முறையில் மேற்கொளளாமை குறித்து ஆராய மததிய போக்குவரத்து சபை நடவடிககை எடுத்துள்ளது.

இதனை முன்னிட்டு விசேட விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக மத்திய போக்குவ்ரத்து சபையின் தலைவர் நிஹால பெரகரா தெரிவித்தார்.

நாட்டிலுள்ள சகல பஸ் கொத்தணி கம்பனிகளுக்கும் இந்தக் குழுவினர் நேரில் சென்று இந்த விடயம் தொடர்பாக ஆராய்வார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

சில கொத்தணி பஸ் நிறுவனங்களின சாரதிகள் தமது பஸ் வண்டிகளில தொழில்நுட்பக் கோளாறு இருப்பதாகப் பொய் கூறி கடமைகளில் ஈடுபடுபதைத் தவிர்த்து வருகின்றனர்.

இதனால் பஸ் வண்டிகளில் ஏற்படும் கோளாறுகள் குறித்து பதிவு செய்யும் அட்டவணை ஆவணமொன்றை நடைமுறைப்படுத்துமாறு சகல டிப்போக்களுக்கும் பணிக்கப்பட்டுள்ளது.

டிப்போ வளவுக்குள் சூதாட்ட நடவடிக்கைகள் இடம்பெற்றால் அவற்றுக்கு டிப்போ முகாமையாளர்கள் பொறுப்பேற்க வேண்டுமென்றும் நிஹால் பெரகரா மேலும் தெரிவித்துள்ளார். (ற-9)

## 'செவ்விளக்கு' நாடகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீட, நுண்கலைத்துறை நாடகமும் அரங்கியலும் மாணவர்களினால் ஆற்றுகை செய்யப்பட்டுவரும் 'செவ்விளக்கு' நாடகம் தனது அரங்கப் பயணத்தின் அடுத்த கட்டமாக வட்டுக்கோட்டை விக்ரோறியாக் கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் நாளையும் நாளை மறுதினமும் மாலை 7.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (ற)

## வயம்ப பல்கலைக்கழகத்தின் இரு பீடங்கள் மூடப்பட்டுள்ளன

(யாழப்பாணம்)

வயம்ப பல்கலைக்கழக உணவும் ஊட்டமும் மற்றும் விவசாய பீடங்கள் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன.

இலங்கை வயமப பல்கலைக் கழகத்தின் உணவும் ஊட்டமும் மற்றும் விவசாய பீடங்களில புது மாணவர்கள் மீது பகிடிவதை இடம்பெற்றமை விரிவுரையாளர்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

சிரேஷ்ட மாணவர்களுக்கு விரிவுரையாளர்கள் இப் பகிடிவதை சம்பந்தமாக எடுத்துரைத்தனர். எனினும், அங்கு தொடந்தும் பகிடிவதை இடம்பெற்றமை உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து பீடாதிபதிகள் மேற்படி இரு பீடங்களையும் மறு அறிவித்தல்வரை மூடியுள்ளார்கள்.

மேற்படி இரு பீடங்களிலும் தமிழ் மாணவர்கள் அண்மைக் காலங்களில் கணிசமானளவுகளில் கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தககது. (ற-12)

## பறவைகள் அழியும் ஆபத்து!

உலகில் உள்ள மொத்தப் பறவைகளில் ஐந்தில் ஒரு பகுதி அழியும் அபாயத்தில் இருப்பதாகப் 'போர்டு லைப் இன்டர் நேஷனல்' என்ற அமைப்பு கூறியுள்ளது.

உலகில் மொத்தம் 9 ஆயிரத்து 775 பறவை இனங்கள் உள்ளன. அவற்றில் 3ஆயிரத்து 212 பறவை இனங்கள் அழியும் ஆபத்தல் இருக்கின்றன, 179 பறவை இனங்கள மிகப்பெரிய ஆபத்தில் இருககின்றன. பறவைகள் வசிக்கும் காடுகளை மனிதன் அழித்து வருவதால பறவை இனங்கள் அழியும் ஆபத்தில் உள்ளன. (ற)

## சட்டவிரோத டொலர் தாள்கள்; பகுப்பாய்வாளருக்கு அனுப்பிவைப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் டொலர் தாள்கள் அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

டொலர் தாள்களை இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு நேற்று முன தினம் அனுப்பியதாக சுங்கத் திணைககளத்தின் பிரதான சுங்கத்தீர்வு அதிகாரி எஸ்.முருக சூரிய தெரிவித்துள்ளார்.

2கோடியே 60ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த டொலர் தாள்கள் வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் வைத்துக் கைப்பற்றப்பட்டன.

இந்த டொலர் தாள்கள் சாதாரண கடதாசிகளைப் போன்றே விமான நிலையத்தினூடாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

பின்னர் அந்தக கடதாசிகள் இரசாயனப் பதார்த்தம் சேர்க்கப்பட்டு டொலர் தாள்களாக மாற்றப்பட்டுளளதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (ற-2)

## மடி மீது அமர்ந்திருக்கும் ஆபத்து

'லப்-ரொப்' மடி கணனியால் பலவித உடல் உபாதைகள விளையும் என கொர்னல் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அலன் கெட்ஜ தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய தொழில் நுட்ப வேலைகளுக்காக பயன்படுத்தப்படும் மடிக்கணனி சாதாரண கணனியை நிவர்த்தி செய்வதற்காகவும் தொடர்ந்து 8மணிநேரம் பயன்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்டதல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.

மிகவும் அருகருகே பொருத்தப்பட்ட விசைப்பலகை மற்றும் கணனி திரையால் கடுமையான கழுத்து, தோள்வலி மற்றும் வேறு சில உடல் உபாதைகள் விளைவதாகவும் அதிகநேரம் மடியில் வைத்துப் பயன்படுத்துவதால், ஆண்களுக்கு உயிரணுக்கள் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளன. (ற)

## தென்மராட்சி வலய மட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தபபட்ட தமிழ்த்தினப் போட்டியின முடிவுகள் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஆக்கம் - எழுத்து - பிரிவு I**

1ஆம் இடம் - த.செந்தாளன் - சாவ.இந்து ஆரம்ப பாடசாலை.

2ஆம் இடம் - நா.கோதண்யா - மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி.

3ஆம் இடம் - பே.சங்கீதா - நுணாவில கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி.

**கட்டுரை வரைதல் - கடிதம் எழுதுதல் - பிரிவு II**

1ஆம் இடம- செ.சாருகா - மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தி.

2ஆம் இடம் - த.அற்சயா - மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.

3ஆம் இடம் - க.கஸ்தூரியா -விடத்தற்பளை கமலாசனி வித்தி.

**பிரிவு III**

1ஆம் இடம் - நிரோஜா -மட்டுவில் சந்திரமௌ. வித்தி.

2ஆம் இடம் - வெ.தேவிகா - மீசாலை வீரசிங்கம் மகா.வித்தி

3ஆம இடம் -க.மைதிலி - கைதடி விக்கினேஸ்வரா வித்தி.

**பிரிவு IV**

1ஆம் இடம் - ப.சர்வசொரூபி - சாவ. மகளிர் கல்லூரி.

2ஆம் இடம் - ச.தர்சனா கொடிகாமம் அ.த.க.பாடசாலை.

3ஆம் இடம் - யோ.கஜேந்தினி மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி.

**பிரிவு V**

1ஆம் இடம் - பி.எட்வின் நிகேதன் - உசன் இராமநாதன் மகாவித்தி.

2ஆம் இடம் - சு.வினோஜா - மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.

**இலக்கணப் போட்டி - பிரிவு IV**

1ஆம் இடம் - க.நிசாந்தன் - சாவ.இந்துக் கல்லூரி

2ஆம் இடம் - க.மயூரி -மட்டுவில் கமலாசனி வித்தி.

3ஆம் இடம் - ந.பகீரதன் - மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.

**பிரிவு V**

1ஆம் இடம் -சு.கார்த்திகா - வரணி மகா வித்தி.

2ஆம் இடம் - த.பிறின்சியா - உசன இராமநாதன் வித்தி.

3ஆம் இடம் - தெ.நிரஞ்சனா - மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.

**திறனாயவுப் போட்டி -பிரிவு V**

1ஆம் இடம் - சி.சிவரூபன் - மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவ வரோதய மகா வித்தி.

2ஆம் இடம் - சி.சுரேகா -வரணி மகா வித்தி.

**குறுநாடகம் ஆக்கம் பிரிவு IV**

1ஆம் இடம் - க.கேதிகா - மந்துவில் ஸ்ரீ பாரதி.

2ஆம் இடம் - ஸ்ரீ.அமுதினி - வரணி மகா வித்தி.

3ஆம் இடம் - தி.பயிற்றா -மட்டுவில சந்திர மௌலீச வித்தி.

**குறுநாடக ஆக்கம்- பிரிவு V**

1ஆம் இடம் - ச.சுஜீவா - வரணி மகா வித்தி.

**கவிதை ஆக்கம் - பிரிவு IV**

1ஆம் இடம் -யா.நிசாந்தன் - மட்டுவில் அ.மி.த.க.பாடசாலை.

2ஆம் இடம் - க.திபியா - விடத்தற்பளை கமலாசனி வித்தி.

3ஆம் இடம் - யோ.அனுஜா - சாவ. இந்துக் கல்லூரி.

**பிரிவு V**

1ஆம் இடம் - த.சிந்துஜா - சாவ. மகளிர் கல்லூரி.

2ஆம் இடம் - நா.கயல்விழி - மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தி.

3ஆம் இடம் - ச.ஜனாத்திரி - சாவ. இந்துக் கல்லூரி.

**சிறுகதை ஆக்கம் - பிரிவு IV**

1ஆம் இடம் - த.குகேந்திரன் - மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி.

2ஆம் இடம் - த.சஞ்ஜிதா - மட்டுவில் கமலாசனி வித்தி.

3ஆம் இடம் - இ.தரணி - விடத்தற்பளை கமலாசனி வித்தி.

**பிரிவு V**

1ஆம் இடம் - ச.மஜிபா - உசன் இராமநாதன் மகா.வித்தி

2ஆம் இடம் - ச.சிவரஞ்சினி - கொடிகாம் திருநாவுக்கரசு மகா வித்தி

3ஆம் இடம் - ச.சசிகலா -சாவ.டிறிபேக் கல்லூரி. (ற-47)

## பாவனைக்குதவாத உணவுகள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் பிரதம பொது சுகாதாரப் பரிசோதகா ஆ.ஜீவநாதனின் தலைமையில் அரியாலை மற்றும் நாவாந்துறைப் பகுதியில் சமீபத்தில் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது காலங்கடந்த மற்றும் மனித பாவனைக்குதவாத பிஸ்கட், கண்டோஸ் ஹொர்லிக்ஸ், சமபோஷ, றொட்டி, இறைச்சிக் குழம்பு, பூந்தி சட்டவிரோத மாட்டிறைச்சி ஆகியன கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. (ற)

## 'சுனாமி' அனர்த்த எச்சரிக்கை கருவியை ஓகஸ்டில் இந்தோனேஷியா அமைக்கும்

(கொழும்பு)

டிசெம்பர் 26இல் ஏற்பட்டதைப போன்று மீண்டும் ஒரு பாரிய அழிவு ஏற்படாது தவிர்க்கும் பொருட்டு பிராந்தியங்களுக்கிடையே எச்சரிக்கைக் கருவியை ஏற்படுத்தும ஒரு வலையமைப்பின் முதற் கடடமாக இந்தோனேஷியா எதிா வரும ஓகஸ்ட் மாதமளவில் எச்சரிக்கைக கருவியை அமைக்கவுள்ளதாக அந்நாட்டு தொழில்நுட்ப அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இக் கருவி தொழிற்பட ஆரம்பக்க முன்னர் ஜகார்த்தாவில் காட்சிக்கு வைக்கப்படும் என இந்தோனேஷியா தொழில்நுட்பத் துறை அமைச்சர் குஷ்மயன்ரோ கடிமன் சிங்கப்பூருக்கு விஜயம் மேற்கொண்டுள்ள வேளையில் தெரிவித்துள்ளார்.

ஆனால், இக்கருவி எங்கு பொருத்தபபடும் என அவர் தெரிவிக்கவில்லை. கடந்த டிசெம்பர் சுனாமியின்போது இந்தோனேஷியாவே கடுமையாகப் பாதிககப்பட்டிருந்தது.

தாய்லாந்து தனது எச்சரிக்கைக கருவியைப் பாங்கொக்கில் கடந்த திங்கட்கிழமை நிறுவியிருந்தது. மேற்படி விடயம் தொடர்பாகக் கலந்துரையாடவே இந்தோனேஷிய அமைச்சர் சிங்கப்பூருக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

விரைவில் அனைத்து தென் பிராந்திய நாடுகளும் இணைந்து இதனை தாபிக்கவுள்ளதாக அவர் கூறினார். பசுபிக் பிராந்தியத்தில் இக் கருவி ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-6)

## திருவிழா

பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

இத் திருவிழாவில் தினமும் மாலை 5.30 மணிக்கு செபமாலையுடன் திருப்பலியும் நடைபெறும். (ற-104)

# கந்தஹாரில் மசூதியில் குண்டுத் தாக்குதல் 50 பேர் உயிரிழப்பு; 164 பேர் படுகாயம்



(கந்தஹார்)

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காந்தஹாரில அமைந்துள்ள மசூதி ஒன்றில் நேற்றுமுன்தினம் நிகழ்ந்த பயங்கர வெடிகுண்டுத் தாக்குதல் சம்பவத்தில் 50 பேர் உயிரிழந்துள்ளதுடன் 164 பேர் படுகாயமடைந்துளளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தலிபான் தீவிரவாதிகளே இந்த வெடிகுணடுத் தாக்குதலுக்குக் காரணமாக இருககலாம் என கூறப்படுகிறது.

சம்பவம் நிகழ்ந்த இடத்தில் பலரின் உடல் உறுப்புகளும் ஆடை அணிகளும் சிதறிக் கிடநததாகவும் மசூதியைச் சுற்றியுள்ள தரைப்பகுதி ரத்த வெள்ளமாக இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மசூதியில் தொழுகை நேரத்தின்போது இச்சம்பவம் நிகழ்ந்ததாக கந்தஹார் காவல் துறை உயர் அதிகாரி சலிக்கான் தெரிவித்தார். மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. படுகாயமடைந்தோர் கந்தஹார் மருத்துவமனையல் அனுமதிக்கப்பட்டுள்ளனர். படுகாயமடைந்த சிலர் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல் லும் வழியில் உயிரிழந்ததாக சலீம்கான் மேலும தெரிவித்தார்.

எனினும், இறுதியாகக் கிடைத்த தகவல்களின் படி இக்குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 50பேர் உயிரிழந்ததாகவும், 164பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மசூதியில் இடம்பெற்ற இத்தீவிரவாத வெடிகுண்டுத் தாக்குதல் சம்பவத்தால் கந்தஹாரில் பெரும் பதற்றம் நிலவுகிறது. (ற)

WORLD NEWS உலக தரிசனம்

## இந்தோனேஷிய தூதரகத்திற்கு வந்த மர்மப்பொதி!

(கான்பெரா)

அவுஸ்திரேலியாவில் கான்பெராவில் உள்ள இந்தோனேஷிய தூதரகத்துக்கு மர்மப் பொதியொன்று வந்ததைத் தொடர்ந்து அது மூடப்பட்டது.

அவுஸ்திரேலியாவில் பொலிஸாரும் தீயணைப்புப் படையினரும் தூதரகத்துக்குச் சென்று விசாரணை நடத்தினர்.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த அழகுக்கலை நிபுணர் கார்பி 4 கிலோ போதைப் பொருளைக் கடத்தியதாகக் கூறி, இந்தோனேஷியாவில் அவருக்கு 20 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதனால் அவுஸ்திரேலிய மக்களிடம் கொந்தளிப்பு ஏற்பட்டது. இதனால் உயிரியல் ஆயுதம் எதுவும் அனுப்பப்பட்டு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. (ற)

## பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் ஈரான் வெற்றிகர ஏவுகணைச் சோதனை

அமெரிக்காவின் கடும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் ஈரான், நடுத்தர ரக ஏவுகணைச் வோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.

இந்த ஏவுகணைகள் குறிப்பிட்ட இலக்கை மிகத் துல்லியமாகச் சென்று தாக்கும் வல்லமை படைத்தவை எனத் தெரியவந்துள்ளது.

அடுத்த முயற்சியாக ஈரான் அணு ஆயுத சோதனையை மேற்கொள்ளக்கூடும் என்பதை இந்நட்வடிக்கை புலப்படுத்துவதாக இஸ்ரேல் அச்சம் வெளியிட்டுள்ளது.

முதன் முதலாக திடதிரவத்தைப் பயன்படுத்தி ஏவுகணையைச் செலுத்தும் முயற்சியை ஈரான் வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது என ஈரான் அரசின் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

2000 கிலோமீற்றர் தூரம் பாய்ந்துசென்று எதிரிகளின் இலக்கைக் தாக்கக்கூடிய ஷாகாப -3 ஏவுகணையில் இந்தத் திடதிரவம் பயன்படுத்தப்பட உள்ளதாகத் தெரிகிறது.

அந்த ஏவுகணையின் குறி இஸ்ரேல் மற்றும் அமெரிக்க நிலைகளின் மீதுதான் இருக்கும் என அந்நாடுகள் அச்சம் தெரிவித்துள்ளதால் எதிர்வரும் நாட்களில் இவ்விவகாரம் மேலும பரபரப்பை உண்டாக்கும் எனத் தெரிவிகக்கப்படுகிறது. (ற)

## பிரான்ஸியர்களின் அதிர்ச்சி வைத்தியம்

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குப் பொதுவாக ஒரே அரசியல் சட்டத்தினைக் கொண்டுவரும் திட்டத்திற்கு எதிராக பிரான்ஸ் மககள் வாக்களித்திருப்பது அந்நாட்டில் மட்டுமன்றி ஐரோப்பிய ஒன்றியம் முழுவதும் கடும் அதிர்ச்சி அலைகளை உருவாக்கியுள்ளது.

இத்திட்டம் குறித்து மக்களுக்குச் சரிவர விளக்கத் தவறியதாக பிரான்ஸ் பிரதமரை பிரான்ஸ் அதிபர் நேற்று முன்தினம் பதவி நீக்கம் செய்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள பெரும்பாலான நாடுகளின் மக்கள் பொதுவான அரசியல் சட்டத்திற்கு ஆதரவு அளித்துளள வேளையில் பிரான்ஸ் மக்கள் எதிர்மறையாக வாக்களித்திருப்பதால் ஐரோப்பிய ஒன்றியத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இதன் உச்சக்கட்டமாக ஐரோப்பிய நாணயமான யூரோ நாணயத்தின் மதிப்பு வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

இந்நிலையில் நெதர்லாந்து நாட்டில் நேற்று முன்தினம் அக்கருத்துக்கணிப்பு நடைபெற்றது.பிரான்ஸ் பொதுக் கருத்துக் கணிப்பு முடிவுகள் எதிரொலிக்கலாம் என்ற அச்சம் நிலவுகிறது. (ற)

## சீனாவில் பெருமழை; வெள்ளப்பெருக்கு 100 பேர் பலி; 80 ஆயிரம் பேர் பாதிப்பு

(பீஜிங்)

சீனாவில் மலைப்பகுதிகளில் கடந்த மூனறு நாட்களாகப் பெய்த பெருமழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு கிராமங்களில் நீர் புகுந்ததில் 10 பேர் பலியாகியுள்ளதுடன் 80 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஹுனான் மாகாணத்தில் உள்ள மலைப் பகுதிகளில் கடந்த 30ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து பலத்த மழை பெய்துவருகிறது. அதிகபட்சமாக 200 மில்லி மீற்றர் மழையும், குறைந்தபட்சமாக 100 மில்லி மீற்றர் மழையும் பதிவாகி இருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால் பெரு வெள்ளம் ஏற்பட்டு ஜின்சாவோ பகுதியில் உள்ள 12 கிராமங்களில் நீர் புகுந்தது. இதில் 3 பேர் பலியானார்கள். 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வெளியேற்றப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை அதிகாலை மக்கள் உறங்கும் நேரத்தில் இந்த வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால், உயிர்ச்சேதம் அதிகமாக இருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

லியான்யூன் மற்றும் ஜின்குவா பகுதிகளில் புகுந்த வெள்ளத்தில் சிக்கி 7 பேர் பலியானார்கள். 20 ஆயிரத்துக்கும மேற்பட்டவர்கள் வெளியேற்றப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதிகளில், போக்குவரத்து மற்றும் மின் விநியோகம் தடைப்பட்டுள்ளன. (ற)

## எனது 2 வது மகன் ஜெப்பும் ஜனாதிபதியாக வேண்டும்

### -ஜோர்ஜ் புஷ்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் தந்தை ஜோர்ஜ்புஷ் எனது 2வது மகன் ஜெப் புஷ்ஷும் ஜனாதிபதி ஆகவேண்டும் என்று கூறி இருக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதியான புஷ்ஷின் தந்தை ஜோர்ஜ் புஷ் 1990ஆம் ஆண்டுகளில் ஜனாதிபதியாக இருந்தவர். புஷ்ஷின் தம்பி ஜெப்புஷ் இப்போது புளோரிடா மாநில கவர்னராக இருக்கிறார்.

எனது 2வது மகன் ஜெப் புஷ்ஷும் ஜனாதிபதி ஆகவேண்டும் என ஜோர்ஜ் புஷ் கூறியுள்ளார்.

சி.என்.என்.டி.விக்கு அளித்த பேட்டியில் தன் விருப்பத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் தொடர்ந்தும் கூறியதாவது,

ஜெப் என்றாவது ஒருநாள் ஜனாதிபதியாக வருவான். இப்போது அதற்கு நேரம் இல்லை. அவன் ஜனாதிபதி ஆவதற்கான நேரம் இன்னும் வரவில்லை. ஜெப்புக்கு இப்போது அந்த ஆசை இல்லை. ஆனால் இதை யாரும நம்பமாட்டார்கள். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் அவன் போட்டியிடமாட்டான்.

அடுத்த தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் என் மகனைத் தொடர்ந்து ஜனாதிபதி ஆவதற்கு சரியான வேட்பாளர் இவர்தான் என்று யாரையும் என்னால் சொல்லமுடியவில்லை. இவ்வாறு ஜோர்ஜ் புஷ் கூறினார்.


அவருடன் இருந்த அவர் மனைவி பார்பரா டி.வி பேட்டியில்,

2008ஆம் ஆண்டு நடக்கும் ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக்கட்சி சார்பில் கிளின்டன் மனைவி ஹிலாரிதான் போட்டியிடுவார். நான் அவருக்கு ஓட்டுப்போடமாட்டேன் என்று குறிப்பிட்டார்.

52 வயது ஆகும் ஜெப்புஷ் 2008ஆம் ஆண்டு நடக்கும் ஜனாதிபதி தேர்தலில் நான் போட்டியிடமாட்டேன் என்று கூறி இருக்கிறார். (ற)

### மீண்டும் அமெரிக்காவில் சர்ச்சை

## கிளின்டன் மீது புதிய குற்றச்சாட்டு



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் இரண்டுமுறை அதிபராக இருந்தவர் பில் கிளின்டன் இவர் தனது அலுவலக உதவியாளர் மோனிகா லெவன்ஸ்கியுடன் செக்ஸ் உறவு வைத்து இருந்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

இதை உண்மை என்று ஒப்புக்கொண்ட கிளின்டன் பொதுமக்கள் முன்னிலையில் பகிரங்க மன்னிப்புக் கேட்டார். பின்னர் நடந்த தேர்தலில் இரண்டுமுறை அவரை அதிபராக அமெரிக்க மக்கள் தேர்ந்தெடுத்தனர்.

அதிபா பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பிறகு கிளினடன் தனது சுயசரிதையை எழுதினார். அதில் தனது இளமைக்காலம், மோனிகா லெவன்ஸ்கியுடன் உறவு பற்றி குறிப்பிட்டு இருந்தார். இந்தப் புத்தகம் உலகம் முழுவதும பரபரப்பாக விற்பனையானது.

இந்த நிலையில் கிளின்டன் மீது இன்னொரு செக்ஸ் குற்றச்சாட்டு கிளம்பி இருக்கிறது. இதை அமெரிக்க வக்கீல் ஜாக்சன் என்பவர் தெரிவித்திருக்கிறார்.

கிளின்டன் எழுதிய 'என்னுடைய வாழ்க்கை' புதககத்தில் அந்தரங்க விசயங்களையும் மறைக்காமல் எழுதி இருப்பார் என்று நினைத்தேன். ஆனால் அப்படிச் செய்யாததால் அவரைபற்றி புதிய புத்தகத்தை நான் எழுதவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு இருக்கிறது என்று அவர் தனது புத்தகத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்.

'பெண்களைக் குறிவைத்து இயங்கும் கிளின்டன் எந்திரம்' என்று அவர் புத்தகத்திற்குப் பெயர் வைத்து இருக்கிறார். இந்தப் பததகத்தில் நாஸ் ஒருவரை கிளினடன் வலுக்கட்டாயமாக படுக்கை அறைக்கு தூக்கிச் சென்று கற்பழித்ததாக அவர் தெரிவித்து இருககிறார்.

கிளின்டன் 1978ஆம் ஆண்டு அர்கான்சஸ் மாகாணத்தில் அட்டார்னி ஜெனலாக இருந்தார். அப்போது நர்ஸ ஜினித்தா பிராட்ரின் என்பவரைச் சந்தித்தார். அவளது அழகில் மயங்கிய கிளின் டன் தன்னுடன் தனியாக காபி சாப்பிட வர முடியுமா என்று கேட்டார்.

இதற்கு ஜினித்தா சம்மதம் தெரிவித்தார். அவரை ஓட்டலுக்கு அழைத்துச் சென்று அவர் வலுக்கட்டாயமாக படுக்கையில் தள்ளி கற்பழித்து விட்டார். இதுகுறித்து ஜினித்தா என்னிடம் தெரிவித்தார்.

அதன்பிறகு கடந்த 1991ஆம் ஆண்டு அதிபர் தேர்தலில் வேட்பாளராக கிளின்டன் பெயர் அறிவிக்கப்படுவதற்குஒரு வாரத்திற்கு முன்னதாக ஜினித்தா அவரைச் சந்தித்தார். அப்போது கிளின்டன் அவரிடம் மன்னிப்புக் கேட்டார் என்று புத்தகத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இது அமெரிக்காவில் மீண்டும சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது. (ற)

## அதிபர் நிக்சனை வீழ்த்திய ஊழல்; 30 ஆண்டு இரகசியம் அம்பலம்

(கலிபோர்னியா)

முன்னாள் அமெரிக்க அதிபர் ரிச்சர்டு நிக்சன் பதவி விலகவும் 'வாட்டர் கேட்' ஊழல் வெளிவர்வும் காரணமாக இருந்த அமெரிக்கப் புலனாய்வு அதிகாரியின் பெயர் தற்போது வெளிவந்துள்ளது.

அமெரிக்க அதிபா ரிச்சர்டு நிக்சன் பதவி விலகக் காரணமான 'வாட்டர் கேட்' ஊழலை அம்பலப்படுத்தி அவரைப் பதவியில் இருந்து விலக்க தி வாஷிங்டன் போஸ்ட் செய்தி காரணமாக அமைந்தது.

கடந்த 70 ஆண்டுகளில் வாட்டர் கேட் ஊழல் உலகம் முழுவதும் பேசப்பட்ட ஒன்று. இந்த ஊழல் புகார் காரணமாக நிக்சன் மீது கண்டனத் தீர்மானம் கொண்டுவந்து சபையில் விசாரிக்கப்பட்டு அதிபர் பதவியை இழக்க நேரிட்டது. 'வாஷிங்டன் போஸ்ட்' இதழில் இச்செய்தியின் அடிப்படை மூலகர்த்தா 'டீப் துரோட்' என்று மட்டும் வெளியிடப்பட்டது. அதாவது 'அதிரகசியம் காக்கும் நபர்' அல்லது 'எக்காரணம் கொண்டும வாயைத் திறக்காதவர்' என்று கூறலாம்.

கடந்த 30 ஆண்டுகளில் இந்த சொற்றொடர் புலனாய்வுச் செய்திகளில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த சொல்லாகும. வாட்டா கேட் என்ற இடத்தில் நடந்த ஊழல் செய்தியைச் சேகரித்தவர் உட்வேர்டு என்ற நிருபர். அவர் யாரிடம் இருந்து தகவல் பெற்றார் என்பதே பரமரகசியம். அதை அப்பத்திரிகை 'டீப் துரோட்' என்று மட்டும் அப்போது குறிப்பிட்டது.

ஆனால் நேற்று முன்தினம் அப்பத்திகையின இணையத்தளத்தில், எப்பி.ஐ என்ற அமெரிகக புலனாய்வுத்துறை (பெடரல் பீரோ ஆப் இன்வெஸ்டி கேஷன்) அதிகாரி டபிள்யூ மார்க் பெல்ட் என்பவரால்தான அந்த டீப் துரோட் என்ற இரகசியம் வெளிச்சமாக்கப்பட்டிருக்கிறது. பெல்ட் தன் வக்கீலிடம் தெரிவத்த தகவல் அந்த இணையத்தள செயதியில் பதிவாகி இருக்கிறது.

அவர் எப்.பி.ஐ.யில் பணிபுரிந்தபோது இத்தகவலைக் கூறிய விஷயத்தை தன் குடும்பத்தினர் உட்பட எவருக்கும் கடைசிவரை தெரிவிக்கவில்லை. வக்கீலுக்குத் தெரிவிக்கும்போது தன் குடும்பத்தினரிடம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

இப்போது கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள சாந்தா ரோஸ் என்ற இடத்தில் வசக்கும அவருக்கு வயது 91. பக்கவாதம் பாதித்ததால், பலவீனமாக இருக்கிறார். அதனால் நிருபர்களைச் சந்திக்க அவர் குடும்பத்தினர் அனுமதக்கவில்லை. ஆனால் அவர் பேரன், 'தன் தாய்நாட்டிற்கு [illegible] அநீதி இழைக்கப்படும்போது அதை நிவர்த்தி செய்ய எந்தத் தியாகமும் செய்யலாம் என்ற கொள்கை உடையவர் தாத்தா' என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.

'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையில் தலைமைப் பொறுப்பில் அப்போது இருந்தவர்களும் 'டீப் துரோட்' என்பது பெல்ட்தான் என்பதை உறுதிப்படுத்தினர். (ற)

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும் - குறள்

# வலம்புரி

## புத்தர் சிலைக்குத் தீர்வு காண முடியாதவர்களால்...

திருகோணமலை நகரமையத்தில் வைக்கப்பட்ட புத்தர் சிலை இனப்பிரச்சினையை மறைக்கும் அளவில் வியாபித்துள்ளது.

திருமலை நகரமையத்தில் வைக்கப்பட்ட புத்தர் சிலை குறித்து ஓர் இணக்கப்பாட்டிற்குள் வருவதற்குள் தமிழர் தாயகப்பகுதிகளில் புத்தர் சிலைகளை வைப்பதில் பேரினவாதிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

முந்திவந்த செவியை பிந்திவந்த கொம்பு மறைப்பதுபோல இனப்பிரச்சினையின் வடிவத்தை மாற்றுவதில் பேரினவாதிகள் புதியயுக்தியை கையாண்டுள்ளனர். அந்த யுக்தியே புத்தர்சிலைகளை ஆங்காங்கே நிறுவும் நடவடிக்கையாகும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் ஆட்சியில் இத்தகைய கீழ்த்தரமான சம்பவங்கள் நடைபெறுகிறதெனில் அதற்கு அரசின் ஆசி உண்டு என்பதை மறுத்துவிட முடியாது.

இனவாதத்தால் குட்டிச்சுவராகிப்போன இந்த நாட்டை கட்டியெழுப்பவேண்டிய நோக்கத்தில் ஆழிப்பேரலையால் உறவுகளை இழந்து உலகவாழ்வை துலைத்துவிட்டு துன்பத்தில் மூழ்கியிருக்கும் மக்களை மீட்டு அவர்களின் வாழ்வில் ஒளியேற்றவேண்டிய தருணத்தில் புத்தர்சிலைகளை புதிதாக பிரதிஷ்டைசெய்து புதிய பிரச்சினைகளை கிளப்புவது எந்தளவுக்கு நியாயமானது.

மனித சமூகம் எங்கோ சென்று விட்டது. சந்திரனில் கல்லெடுத்து செவ்வாயில் வீடு கட்டி குடியிருக்கும் முயற்சியில் உலகம் ஈடுபட்டிருக்க இங்கு வேடுவர் காலத்து வேலைகள் நடக்கின்றன.

இலங்கை மக்கள் அனைவருக்கும் இந்த நாடு சொந்தமானது. திருமலை நகரமையத்தில் புத்தர் சிலையை வைப்பதன் மூலமே இனப்பிரச்சினை தீரும் என்றால் அல்லது பௌத்த மதம் காப்பாற்றப்படும் என்றால் அதனை ஏற்றுக்கொள்வதில் எந்தத்தவறும் இருக்கமுடியாது.

ஆனால் தென்னிலங்கையில் மலைகளிலும் அரசமரங்களிலும் வைக்கப்பட்ட புத்தர்சிலைகள் காகங்கள் எச்சம் போடுமிடமாக இருக்க. காவி உடுத்தவர்கள் பிரித்தோத நேரமில்லாதிருக்க திருமலை நகர மையத்தில் மட்டும் புத்தர் சிலை அமைக்கப்பட்டதன் காரணம் தான் என்ன.

புத்தரை வழிபடுவதற்கோ புத்தர்சிலையை புதிதாக வைப்பதற்கோ தமிழ்மக்கள் எதிரானவர்கள் அல்ல. ஆரியகுளப்பகுதியிலும் நயினாதீவிலும் கந்தரோடையிலும் புத்தர் சிலைவைக்கப்பட்டுள்ளது. தென்னிலங்கை மக்கள் இங்குவந்து வழிபட்டு செல்கின்றனர். எந்த எதிர்ப்பையும் தமிழ்மக்கள் தெரிவிக்கவில்லை. இவ்வாறு பெருந்தன்மையுடன் தமிழர்கள் நடந்துகொள்ள அதனைப்புரிந்துகொள்ளாதவர்கள் புதிய பிரச்சினையைதோற்றுவிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பது வேதனைக்குரியது.

தீர்க்கப்பட வேண்டியஇனப்பிரச்சினை கிடப்பில் கிடக்க, புதிய பிரச்சினை எழுந்திருப்பது திட்டமிட்ட சதி என்பது புரிந்துகொள்ளப்படவேண்டிய ஒன்றாகும். இனப்பிரச்சினைக்கு சமாதானப்பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதில் நோர்வே தனதுமுயற்சியை தொடர்ந்தும் மேற்கொண்டுவருகின்றது.

இதற்காக நோர்வேயின்தூதுவர்கள் நேரிலும் தகவல் தொடர்பாடல்கள் மூலமும் ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு நிலைமையைக்கேட்டறிகின்றனர். எத்தனை நாளைக்குத்தான் சாட்டுச்சொல்ல முடியும். உண்மையில் இனப்பிரச்சினைக்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதன் நோக்கம் அரசுக்கு அறவே கிடையாது. எனினும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்போம் என்ற உத்தரவாதத்தை உலக நாடுகளுக்கு ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

இதனைச் செய்யமுடியாதுபோவதை உலகம் உணர்ந்துகொள்வதற்கு முன்னதாக பிரச்சினையை இடம் நகர்த்தி புதிய தோற்றப்பட்டை ஏற்படுத்துவதே ஜனாதிபதியின் நோக்கம். அதற்காகவே புத்தர் சிலை அமைக்கும் புதிய குழப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அவர் எண்ணியதை எண்ணியபடி நிறைவேற்றுவதற்கு திருகோணமலையில் சிங்களப்பேரினவாதிகள் கூடியுள்ளனர். இனப்பிரச்சினையே நாட்டின் முதன்மைப்பிரச்சினை என்பதை ஜனாதிபதி உணர்வாராயின் புத்தர்சிலை என்பது ஒரு பிரச்சினையாக இருக்க மாட்டாது.

தனக்கு இருக்கக்கூடிய நிறைவேற்று அதிகாரத்தைக்கொண்டு ஜனாதிபதி புத்தர்சிலையை அகற்றியிருப்பார். ஆனால் அது நடக்கவில்லை. புத்தர் சிலைக்கே தீர்வுகாண முடியாதவர்களால் இனப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வுகாண முடியும்?.

# குறுகிய அரசியல் இலாபங்களுக்காக செயற்படாது கல்வித்துறையை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்குக!

## அரசியல் தலைவர்களுக்கு ஜனாதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டின் பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் கல்விசாரா ஊழியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இதனால் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

எமது மாணவர்கள் வெளிநாடுகளில் உயர்கல்வி பெற்றுக் கொள்வதற்காக மில்லியன் கணக்கில் செலவிடுகின்றனர். இருப்பினும் இந்த உயர்கல்வியை ஒவ்வொரு மாணவரும் மேற்கொள்ள முடியாது.

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த விரிவுரையாளர்களை இலங்கைக்கு கொண்டுவருவதன் மூலம் இந்தச செலவைக் குறைத்து மாணவர்களுக்கு குறைந்த செலவில் கல்வியை வழங்கமுடியும். இதனைச் செயற்படுத்துவதன் மூலம் பாரிய அளவிலான தொகையை சேமிக்க முடியும்.

இருப்பினும் சில முரண்பாடான கருத்துக்களை முன்வைக்கும் சிலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் இந்த நாட்டிலுள்ள பெற்றோர்களினால் மேற்கொள்ளக்கூடிய மாற்றுவழிகள் வேறெதுவும் இலலை தமது நிலபுலங்களை விற்று பிள்ளைகளின் கல்விக்காக பெரும் பணத்தை செலவிடுகின்றனர்.

இலங்கையில் உயர் கல்வியைத் தொடர்வதற்காக மூன்று வீதமானோரே பல்கலைக்கழகங்களுக்குத் தகுதி பெறுகின்றனர். இதனால் தற்போதைய நிலையை மாற்றியமைப்பதற்கு கொள்கையளவிலான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எனவே குறுகிய அரசியல் இலாபங்களுக்காகச் செயற படாது நாட்டின் கல்வித்துறையைக் கட்டியெழுப்புவதற்காக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நான் அரசியல தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றேன் என்று குறிப்பிட்டார். (ற-8)

# சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் கிளின்டனின் விஜயம்; ஐ.நா. பிரதிநிதியை அரசாங்கம் வெளியேற்றும்?

(கொழும்பு)

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதியை இலங்கை அரசு விரைவில் வெளியேற்றக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நா விசேடப் பிரதிநிதியுமான அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியுமான பில் கிளின்டனின் அண்மைய இலங்கைப் பயணத்தின் போது கிளின்டனை தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் ரெஜி சந்தித்துப் பேசியது குறித்து இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சு கடும் விசனத்தை வெளிப்படுத்தியிருக்கிறது.

கிளின்டனின் பயணத்தில் தமிழ்நெற் இணையத்தள புகைப்படக் கலைஞர் பங்கேற்றது குறித்தும் வெளியுறவுத்துறை விசனமடைந்துள்ளது.

கிளின்டனை தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சந்திப்பது தொடர்பாக தமக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும் வெளியுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கொழும்பில் உள்ள ஐ.நா.அலுவலகப் பேசசாளர் ப்றெனன் ஜோன்ஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

பல்வேறு சமூகத்தினரை சந்திக்க கிளின்டன் விருப்பம் தெரிவத்திருந்தார். அதில் புனர்வாழ்வுக் கழகமும் இடம்பெற்றிருந்தது.

ஆழிப்பேரலைக் காலத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆற்றிய பணியை அனைவரும் அறிவர். அத்துடன் ஐ.நா.மற்றும் இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வ நிறுவனம் தான் புனர்வாழ்வுக்கழகம், அவர்கள் தம்முடன் தமிழ்நெற் புகைப்படக் கலைஞரை இச்சந்திப்பின் போது அழைத்து வந்தனரா என்பது எமக்குத் தெரியாது என்றார்.

ஐ.நா. பேச்சாளரின் இந்தக் கருத்துக்கு இராணுவத் தரப்பிலிருந்தும் அரச தரப்பிலிருந்தும் கடும் கண்டனம் தெரிவிக்கப்படடுள்ளது. இதற்கு முன்னர் இருமுறை ஐ.நாவின் கொழும்பு பிரதிநிதி மைக்கேல் பெர்மியோவை இலங்கை வெளியுறவுத்துறை எச்சரித்திருந்தது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழீழப் பகுதிகளை ஐ.நா. செயலர் நாயகம் கோபி அனான் பார்வையிட விருப் பம தெரிவித்த போதும், கௌசல்யன் படுகொலைக்கு அனான கண்டனம் தெரிவித்த போதும் இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சு இந்த எச்சரிக்கைகளை விடுத்திருந்தது.

தற்போது கிளின்டன் பயணமும சர்ச்சைக்குள்ளாகியிருப்பதால் அவரை இலங்கை அரசு வெளியேற்றக் கூடும் என்று கூறப்படுகிறது. ஐ.நாவின் இலங்கைப் பிரதிநிதிகளாக இருந்தவர்களை இருமுறை ஏற்கனவே இலங்கை அரசு வெளியேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-4,6)

## படுகொலை கலாசாரம்; நிழல்யுத்தம்;

# க.கா.குழு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - ஹக்கீம் வலியுறுத்து

(கொழும்பு)

இராணுவம் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இடையில் இடம்பெற்றுவரும் நிழல்யுத்தம் தொடர்பில் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு தலையிட்டு அது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் அரச தரப்பும், புலிகளும் மாறி மாறி எதிர்த் தரப்பு உயரதிகாரிகளைப் படுகொலை செய்கின்ற கலாசாரம் தொடர்ந்தும் நீடித்து வருவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இதுவிடயம் குறித்து ஹக்கீம் மேலும் கருத்து வெளியிடுகையில்,

இந்தக்கொலைகளை சமாதானத்தினை எதிர்பார்த்து நிற்கின்ற முஸ்லிம் சமூகத்தினர் சார்பில் நாம் வன்மையாகக கண்டிக்கிறோம்.

இநதப் படுகொலைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இருதரப்புக்குமிடையில் தொடர்ந்தும் நிழல்யுத்தமொன்று நடைபெற்று வருகிறது. எனவே இது தொடர்பில், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் சமாதான ஏற்பாட்டாளர்களாகச் செயற்படுகின்ற நோர்வேத் தரப்பினர் போன்றோர் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.(ற-4)

## பனை அபி.பணிகளை மேற்கொள்ள அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(கொழும்பு)

தென்பகுதியில் பனை அபிவிருத்திப்பணிகளை துரிதமாக மேற்கொள்வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

பனையின் பயன்பாடுகளை நாடளாவிய ரீதியில் ஏற்படுத்துவதுடன் அதன் மூலமான சுயதொழில் வாய்ப்புகளைப் பெருக்குவதை நோக்காகக் கொண்டே அமைச்சர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

அண்மையில் கெக்கிராவ, ஹிரிப்பிட்டியாகம, ஜிதேந்திராராம விகாரையில் பனை சார்ந்த கைப்பணிப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனைச் சந்தையும் பனை அபிவிருத்தி சபைத் தலைவர் எஸ்.சிவதாசனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பனை சாந்த கைப்பணிப் பொருட்களில் 6மாத பயிற சியைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு அன்றைய தினம் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ற-5)

## தினசரி தியானம்

ஒவ்வொரு ஆன்மாவும் உள்நிறைந்த தெய்வத் தன்மையுடையது. உள்ளும் புறமும் நிறைந்திருக்கும். இயற்கையை அடக்கி உள்ளேயுள்ள தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவதே நோக்கமாகும். செயல்வழிபாடு, பிராணனைக் கட்டுப்படுத்துதல், தத்துவ ஆராய்ச்சி என்பவற்றுள் ஒன்றினாலோ, பலவற்றினாலோ, எல்லாவற்றினாலுமோ இதைச் செய்து சுதந்திரனாக இரு இதுவே சமயத்தின் முழு உண்மை. கொள்கைகளும் சடங்குகளும் நூல்களும கோவில் களும் பிறவும் இதற்கு உதவிசெய்யும் கருவிகளே.

# கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழீழ மாணவர் எழுச்சிநாள்



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் தமிழீழ மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுகள் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது. நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மத்திய மைதானத்திலிருந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல் மாவீரரான பொன்.சிவகுமாரன், மற்றும் மாவீரரான முன்னாள் யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மேஜர் முரளி ஆகியோரின் உருவப்படத்தினை மாணவர்கள் தாங்கிவர ஆரம்பித்த பேரணி பிரதான வீதிவழியாக நகர்ந்து கிளிநொச்சி சந்திரன் பூங்காவைச் சென்றடைந்தது.

அங்கு கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியத் தலைவர் தலைமையில் அரங்க நிகழ்வுகளும், எழுச்சி உரைகளும் நிகழ்த்தப்பட்டன. (ச-4)

# பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பங்கேற்பு

ஆழிப்பேரலை மற்றும் இயற்கை அனர்த்தம் தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகளுக்கான இலங்கைப் பாராளுமன்றக் குழுவின் கூட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் கொழும்பு அலுவலகப் பிரதிநிதி எஸ்.சிவசுப்பிரமணியம் பங்கேற்றார் என பாராளுமன்ற குழுவிற்கான இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இயற்கை அனர்த்த மீளமைப்புப் பணிகளில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு பற்றி அவர் இக்கூட்டத்தில் விபரித்தார்.

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளை மேற்கொள்வதில் உள்ள இடர்பாடுகளையும், நாட்டிற்குக் கிடைக்கும் சர்வதேச உதவியை ஒழுங்கமைப்பு செய்வதெற்கான ஒரு கட்டமைப்புத் தேவையென்பதை இக்கூட்டத்தில் சுப்பிரமணியம் வலியுறுத்தினார்.

இத்தகைய கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் இலங்கை மக்களுக்கான தேவைகளை உதவிவழங்கும் நாடுகள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பெறுவது எளிதானதாக இருக்குமென்று அவர் மேலும் வலியுறுத்திக் கூறியுள்ளதாக அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் ரொபின்போபிரிட்ஜ், இலங்கை தேசிய அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையம், சர்வோதய அமைப்பு, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ், சேவ் சில்ட்ரன், சஹானா பவுண்டேசன், வேர்ல்ட் விசன், இலங்கைப் பௌத்த காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். (ச-4,6)


## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

**வருடாந்த இல்ல தடகளப் போட்டி - 2005**

காலம் : 04.06.2005 சனிக்கிழமை பி.ப 2 மணி

மைதானம்: வீரசங்கிலியன் விளையாட்டு மைதானம்

தலைவர்

கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்

பிரதம விருந்தினர்

திரு.K.கணேஸ்

(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்கள்

திரு.R.ஹொகான் ராஜசிங்கம்

(யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி)

திரு.R.பொன்குமார்

பரிசில் வழங்கல்

திருவாட்டி பரமேஸ்வரி கணேஸ்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

யா.தே.க.க சமூகம்

(C-1420)

அனுசரணை வழங்குபவர்

**E.S.பேரம்பலம் அன் சன்ஸ்**

இல - 50, 52, 54 கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்


## புதிய கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் அமரர் த.சின்னத்தம்பி ஞாபகார்த்த புதிய மாடிக் கட்டடத் திறப்பு விழா இன்று நண்பகல் 2 மணிக்கு வைபவரீதியாக திறந்துவைக்கப் படவுள்ளது. (ச-4)

## காணாமல்போனவர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

பொலநறுவை பொலிஸ்நிலையத்தில் பணியாற்றி கடந்த சில தினங்களுக்கு முன்னர் காணாமல்போன முன்னாள் ஊர்காவல் படைவீரர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

செவனப்பிட்டிய காட்டுப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இறந்தவர் ரங்கனகெலும் குமார என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ச -4)

## உதவி வழங்...

தெரிவித்துள்ளார்.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பானிய வங்கி ஆகியவற்றை ஆலோசனை நடத்த வருமாறு தமிழீழவிடுதலைப்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அழைப்பு விடுத்துள்ளார். இச்சந்திப்பு நாளை நடைபெறுமெனக் கூறப்பட்டபோதும் அச்சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டதாக பின்னர் தெரிவிக்கப்பட்டது. (ச.4)

# கேணல் சங்கர் மீதான தாக்குதலை முத்தலிப்பே நெறிப்படுத்தினாராம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் சங்கரை படுகொலை செய்ததற்காக, கொல்லப்பட்ட இராணுவப் புலனாய்வு அதிகாரி லெப்.கேணல் முத்தலிப்புக்கு இராணுவத் தலைமையகம் சிறப்புப் பதக்கம் வழங்கியதாக கொழும்பிலிருந்து வெளிவரும் நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மூத்த தளபதி கேணல் சங்கரை படுகொலைசெய்த இராணுவ ஆழ ஊடுருவும் அணித்த தாக்குதலை நெறிப்படுத்தியவர் முத்தலிப் என்றும், இதற்காக இராணுவத் தலைமை ரணவிக்கரம பதக்கம் வழங்கிக் கௌரவித்ததாகவும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கேணல் சங்கர், கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான கங்கைஅமரன் ஆகியோர் கொல்லப்பட்ட ஆழ ஊடுருவும் அணித் தாக்குலில் புலனாய்வுத் தகவல் திரட்டி வழங்குவதை முத்தலிப்பே நெறிப்படுத்தினார் என்று அச் செய்தி தெரிவித்துள்ளது. (ச)

## தமிழீழ மாணவர்....

றது. இந்த எழுச்சிக் கூட்டத்தில் பொதுச்சுடரினை யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களின் பொறுப்பாளர் சுதாஸ், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம், மாணவர் ஆலோசகர் இளம்பிறையன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் இணைப்பாளர் கண்ணன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து சிவகுமாரின் படத்திற்கு யாழ். மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் ஆர்வலன் ஈகச்சுடர் ஏற்றிவைக்க, வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பன் படத்திற்கு மலர்மாலை அணிவித்தார்.

மேஜர் முரளியின் படத்திற்கு தீவக வலய அரசியல்துறைப் பொறுப்பாளர் நரேன் ஈகச்சுடர் ஏற்றிவைக்க சங்கானை பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பு மலர்மாலை அணிவித்தார்.

தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைவர் ப.குணேந்திரன் தலைமையில் நடைபெற்ற எழுச்சிக் கூட்டத்தில் 2005ம் ஆண்டிற்கான மாணவர் பிரகடனமும் வாசிக்கப் பட்டது.

யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எஸ். கிருஷ்ணா, பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் ப.கனகலிங்கம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம், யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சொலமன் சிறில் ஆகியோர் உரையாற்றினர்.

இந்த எழுச்சிப் பேரணியில் கலந்துகொள்வதற்காக யாழ். குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் மாணவர்கள் பெருமளவில் வருகைதந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-19,43)

## யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில்...

முழுமையாகச் செயற்படுத்தி இயல்புநிலையை தோற்றுவிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது என்றும் தமிழ்ச் செல்வன் கூறினார். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதிலும் பொதுக்கட்டைப்பு போன்ற விடயங்களிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் எத்தகைய நெகிழவுத் தன்மைகளோடு இயங்கிவருகிறார்கள் என்பதையும் சுவிஸ் தூதுவருக்கு தமிழ்ச்செல்வன் விளக்கினார்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இலங்கைக்கான சுவிஸ் நாட்டுத் தூதுவர் பேனாடினோ றகனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி சமாதான செயலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனுடன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பினை முடித்துக் கொண்ட சுவிஸ் நாட்டுத் தூதுவர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

பொதுக் கட்டமைப்பு விரைவில் கைச்சாத்திடக்கூடிய வாய்ப்புக்கள் தற்போது அதிகரித்துக் காணப்படுவதாகவும், இதற்கு விடுதலைப் புலிகள் முழுமூச்சுடன் செயற்பட்டுவருவதாகத் தெரிவித்தார்.

அரசும், விடுதலைப் புலிகளும் பொதுக் கட்டமைப்பில் கைச்சாத்திடுவதையே தமது அரசு விரும்புவதாகவும், அதற்கான சகலவிதமான ஒத்துழைப்புக்களையும், உதவிகளையும் வழங்கத் தமது அரசு தயாராகவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை இச்சந்திப்பில் அண்மையில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் அரசியல்படுகொலைகள் தொடர்பாகவும் கலந்துரையாடியதாகவும் அவர் தெரிவித்தார்.

சந்திப்பினை முடித்துக்கொண்ட சுவிஸ் நாட்டுத் தூதுவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகம் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஆகியவற்றுக்குச் சென்று அங்குள்ள பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

பின்னர் கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பெரும் அழிவுகளைச் சந்தித்த முல்லைத்தீவுப் பகுதிக்குச் சென்று அங்கு தற்போது நடைபெற்றுவரும் இரண்டாம் கட்ட புனரமைப்புப் பணிகளையும் பார்வையிட்டார். (ச-4)

## இந்தியப்பிரத...

மைப்பு நடடிக்கைகளுக்காக விடுதலைப்புலிகள் அமைப்புடன் இணைந்து கூட்டமைப்பு உருவாக்குவது சேது சமுத்திரத்திட்டம் மற்றும்இந்தியா இலங்கைக்கிடையிலான விரிவான வர்த்தக ஒப்பந்தம் குறித்த விடயங்களே இச் சந்திப்புக்களில் கலந்துரையாடப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-4)

## இராணுவத்தினரை வெளியேற்றக்கோரி...

இரா.சம்பந்தன், கா.துரைரட்ணசிங்கம் ஆகியோர் இக் கோரிக்கையினை விடுத்ததுடன், நேற்று வரை காலஅவகாசமும் வழங்கியிருந்தனர்.

எனினும் இராணுவத்தினர் எவரும் அங்கிருந்து வெளியேற்றப் படவில்லை. இதனையடுத்து திருகோணமலை சில்வஸ்ரார் ஹோட்டலில் நேற்று நண்பகல் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா தலைமையில் ஒன்றுகூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இத்தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

வடக்குக் கிழக்கில் தமிழ் மக்கள் ஒன்றிணைந்தால் எவ்வாறானநிலை உருவாகும் என்பதை அரசுக்கு தெரியப்படுத்தும் விதத்தில் அனைத்துச் செயற்பாடுகளையும் இடைநிறுத்தி ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. வர்த்தக நிலையங்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் என் பவற்றைமூடியும், உள்ளூர் வெளியூர் போக்குவரத்துச் சேவைகளை இடைநிறுத்தியும் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் புத்தர் சிலை அகற்றப்படாதுவிட்டால் வடக்குக் கிழக்கில் தொடர் போராட்டங்களை நடத்தவுள்ளதுடன், கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)


மனோகரா யாழ்




கா.நேரம்: 10.30,2.30,6.30,9.30(பு.நே)

நாதன்ஸ் சினிமா

களிகூட்டப்பட்டது யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக

உங்கள்

பிரகாஷ்ராஜ், நவதீப், தேசாஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த

அறிந்தும் அறியாமலும்

கா.நே: 10.30,2.30,6.30,9.30(பு.நே)

நிறைஞ்சனாஸ்

இன்று முதல் சங்கானை

மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த




கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.